# பொருளாதாரச் செயலாற்றம், பிரச்சினைகள், கொள்கைகள்–1988

## அறிமுகம்

1988 இல் இலங்கையின் பொருளாதாரம் முந்திய ஆண்டின் வரட்சியின் பாதிப்பிற்குட்பட்ட குறைவான வளர்ச்சி வீதச் செயலாற்றத்திலிருந்து மிதமான ஒரு மீட்பினைக் காட்டியது. உண்மை நியதிகளில் மொத்த உள்நாட்டு உற்பத்தி (மொ.உ.உ.) 1987 இன் 1.5 சதவீத வளர்ச்சி வீதத்துடன் ஒப்பிடுகையில் 1988 இல் 2.7 சதவீதத்தினால் அதிகரித்துள்ளதாக மதிப்பிடப்பட்டுள்ளது. வெளிநாட்டிலிருந்தான தேறிய காரணி வருமானப் பாய்ச்சலுக்குச் சீராக்கம் செய்யப்பட்டு அடையப்படும் மொத்தத் தேசிய உற்பத்தி (மொ.தே.உ.) யும் இதேபோக்கினை விளக்குவதாய் முந்திய ஆண்டின் 1.6 சதவீதம் கொண்ட உண்மை மொ.தே.உ. இன் வளர்ச்சி வீதத்துடன் ஒப்பிடுகையில் 1988 இல் 2.5 சதவீத வளர்ச்சியைப் பதிவு செய்தது.

அட்டவணை 1.1

### தேசிய வருமானப் புள்ளி விபரங்கள் 1986—1988

| விடயம் | தொகை (ப. இ. ரூபாய்களில்) | | | வளர்ச்சி வீதம் (%) | |
|---|---|---|---|---|---|
| | 1986 | 1987 | 1988 * | 1987 | 1988* |
| 1. நடைமுறைக் காரணிச் செலவு விலைகளில் மொ. உ. உ. ... | 163,713 | 177,731 | 203,516 | 8.6 | 14.5 |
| 2. நிலையான (1982) காரணிச் செலவு விலைகளில் மொ. உ. உ. ... | 114,261 | 115,922 | 119,050 | 1.5 | 2.7 |
| 3. நடைமுறைக் காரணிச் செலவு விலைகளில் மொ. தே. உ. ... | 159,852 | 173,395 | 198,017 | 8.5 | 14.2 |
| 4. நிலையான (1982) காரணிச் செலவு விலைகளில் மொ. தே. உ. ... | 111,565 | 113,307 | 116,095 | 1.6 | 2.5 |
| 5. நடுவாண்டுக் குடித்தொகை ('000) ... | 16,117 | 16,361 | 16,586 | 1.5 | 1.4 |
| 6. தலைக்குரிய மொ. தே. உ. | | | | | |
| (i) நடைமுறை விலைகளில்(ரூபாய்களில்) | 9,918 | 10,598 | 11,939 | 6.9 | 12.6 |
| (ii) நிலையான விலைகளில்(ரூபாய்களில்) | 6,922 | 6,925 | 6,999 | 0.1 | 1.1 |

* தற்காலிகமானவை  மூலம்: இலங்கை மத்திய வங்கி.

இவ் வளர்ச்சி வீதம் அடையப்பட்ட சூழ்நிலைகளை, அதாவது உற்பத்தி, பங்கீட்டு நடவடிக்கைகளில் பாதகமான தாக்கத்தினை ஏற்படுத்திய பரந்த ரீதியிலான உள்நாட்டுக் குழப்பங்களைக் கவனத்திற் கொள்ளும்போது வளர்ச்சி வீதத்தில் ஏற்பட்ட இத்திருப்பம் பாராட்டற்குரியதொன்றாகும். விடுபட முடியாத பாதகமான சூழ்நிலைகளை எதிர்த்து வெற்றி கொள்வதற்கான போட்டித் தன்மையும், சந்தை அடிப்படையிலானதுமான ஊக்குவிப்பினைக் கொண்ட திறந்த பொருளாதாரத்தின் மீட்சியினையும் இது வேண்டி நிற்கின்றது.


1988 இல் நடைமுறைக் காரணிச் செலவு விலைகளிலான மொ.தே.உ. ரூ. 1,980,000 இலட்சமாக மதிப்பிடப்பட்டு 1987 இனைவிட 14.2 சதவீத வளர்ச்சியைப் பதிவு செய்தது. அதேவேளை பொருளாதாரத்தின் பொதுவான விலை மாற்றத்தினை அளவிடும் உள்ளடக்க மொத்தத் தேசிய உற்பத்தி விலைச்சுருக்கி 1988 இல் 11.5 சதவீதத்தினால் அதிகரித்து 1987 இல் பதிவு செய்யப்பட்ட 6.8 சதவீதத்தினைவிடக் கூடிய வீதமாக விளங்கியது. இதன்படி 1988 இல் நிலையான (1982) விலைகளிலான மொத்தத் தேசிய உற்பத்தி ரூ. 1,160,000 இலட்சமாக மதிப்பிடப்பட்டு 2.5 சதவீத அதிகரிப்பினைப் பதிவு செய்தது. மறுபுறம் வர்த்தக மாற்று விகிதத்தின் தாக்கத்திற்குச் சீராக்கம் செய்தபின் அடையப்படும் உண்மைத் தேசிய வருமானம் இவ்வாண்டில் வர்த்தக மாற்று விகிதம் 7 சதவீதத்தினால் மோசமடைந்தமை காரணமாக 0.1 சதவீதத்தினால் சிறிதளவு குறைவடைந்தது.

பதிவாளர் நாயகத்தின் தற்காலிக மதிப்பீடுகளின்படி நடுவாண்டுக் குடித்தொகை 165.9 இலட்சமாக மதிப்பிடப்பட்டு 1987 இனைவிட 1.4 சதவீத அதிகரிப்பினைக் காட்டியது. இதன் விளைவாக நடைமுறை விலைகளிலான தலைக்குரிய மொத்தத் தேசிய உற்பத்தி 1987 இன் ரூ. 10,598 (ஐ.அ. டொலர்கள் 360) உடன் ஒப்பிடுகையில் 1988 இல் ரூ. 11,939 (ஐ.அ. டொலர்கள் 375) ஆக மதிப்பிடப்பட்டுள்ளது. இதனால் 1988 இல் தலைக்குரிய வருமானம் நடைமுறை விலைகளில் 12.6 சதவீதத்தினால் உயர்வடைந்ததாயினும் உண்மை நியதிகளில் அதிகரிப்பு 1.1 சதவீதமாக மட்டும் விளங்கியது.

1988 இன் முன்னேற்றகரமான பொருளாதாரச் செயலாற்றத்திற்கு வேளாண்மைத்துறையின் மீட்சியும், தயாரிப்புத்துறையில் ஏற்பட்ட தொடர்ச்சியான வளர்ச்சியும் முக்கிய காரணிகளாக விளங்கின. காட்டுத்தொழிலையும் கடற்றொழிலையும் உள்ளடக்கிய வேளாண்மைத்துறை 2.1 சதவீதத்தினால் உயர்வடைந்துள்ளமையைத் தற்காலிக மதிப்பீடுகள் காட்டுகின்றன. வரட்சியின் பாதிப்புக் காரணமாக முந்திய ஆண்டில் இத்துறையின் கூட்டப்பட்ட பெறுமதி 6 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்திருந்தது. 1988 இல் வேளாண்மைத்துறையில் ஏற்பட்ட முன்னேற்றமான செயலாற்றம் தேயிலை, நெல், கரும்பு, சிறு ஏற்றுமதிப் பயிர்கள், சிறு உணவுப் பயிர்கள் போன்ற பெருந்தொகையான பண்டங்களின் அதிகரித்த உற்பத்தியின் விளைவாக ஏற்பட்டதாகும். தேயிலை உற்பத்தி 6.4 சதவீதத்தினால் அதிகரித்தவேளையில் நெல் துணைத்துறையின் முழுமையான வளர்ச்சி 16.4 சதவீதமாக அண்மைக் காலத்தில் எந்தவொரு ஆண்டிலும் பதிவு செய்யப்பட்டதனைவிட மிகவும் கூடுதலாக விளங்கியது. சிறு ஏற்றுமதிப் பயிர்கள், சிறு உணவுப் பயிர்கள் கரும்பு என்பனவற்றின் உற்பத்தியிலும் கணிசமான அதிகரிப்புக்கள் பதிவு செய்யப்பட்டன. மறுபுறம் தெங்கு உற்பத்தி 1988 இல் 15.7 சதவீத வீழ்ச்சியைப் பதிவு செய்தமைக்கு 1986 இலும், 1987 இன் முற்பகுதியிலும் நிலவிய வரட்சி நிலைமைகளின் பாதகமான தாக்கமே பெரிதும் காரணமாகும்.

1988 இல் வரவேற்கத்தக்க வளர்ச்சிச் செயலாற்றத்தினைப் பதிவு செய்த இன்னுமொரு துறை சுரங்கம் அகழ்தலும் கல்லுடைத்தலும் துறையாகும். இதில் முக்கியமாக இரத்தினக்கல் அகழ்தலில் ஏற்பட்ட தொடர்ச்சியான விரிவாக்கம் காரணமாகக் கூட்டப்பட்ட பெறுமதி 9 சதவீதத்தினால் அதிகரித்துள்ளதாக மதிப்பிடப்பட்டுள்ளது. 1988 இல் தயாரிப்புத்துறையில் ஏற்பட்ட முழுமையான வளர்ச்சி 4.7 சதவீதமாக மதிப்பிடப்பட்டுள்ளது. இவ்வளர்ச்சியில் முக்கிய பங்கு 1988 இல் உற்பத்தி 7 சதவீதத்தினால் விரிவடைந்துள்ளதாக மதிப்பிடப்பட்டுள்ள தொழிற்சாலைக் கைத்தொழிலில் ஏற்பட்டது. தொழிற்சாலைக் கைத்

## மொத்தத் தேசிய உற்பத்தி




இலங்கை மத்திய வங்கி.

## அட்டவணை 1.2

### மொத்தத் தேசிய உற்பத்தியின் வளர்ச்சியும் உள்ளடக்கமும் 1986 - 1988 நிலையான (1982) காரணிச் செலவு விலைகளில்

| துறை | தொகை (ப. இ. ரூபாய்களில்) | | | வளர்ச்சி வீதம் | | |
|---|---|---|---|---|---|---|
| | 1986 | 1987 | 1988* | 1986 | 1987 | 1988* |
| 1. வேளாண்மை, காட்டுத்தொழில், கடற்றொழில் ... ... | 29,106 | 27,409 | 27,084 | 2.6 | – 5.8 | 2.1 |
| இதில்: | | | | | | |
| 1.1 தேயிலை ... ... | 2,723 | 2,750 | 2,926 | – 1.3 | 1.0 | 6.4 |
| 1.2 இறப்பர் ... ... | 856 | 765 | 770 | 0.6 | – 10.6 | 0.7 |
| 1.3 தெங்கு ... ... | 3,935 | 2,967 | 2,501 | 2.8 | – 24.6 | – 15.7 |
| 1.4 நெல் ... ... | 6,613 | 5,423 | 6,312 | – 2.5 | – 18.0 | 16.4 |
| 1.5 ஏனையவை (ஏனைய வேளாண்மை, காட்டுத்தொழிலும் கடற்றொழிலும்) ... ... | 14,979 | 15,504 | 15,475 | 5.9 | 3.5 | – 0.2 |
| 2. சுரங்கம் அகழ்தலும் கல் உடைத்தலும் ... ... | 2,615 | 3,112 | 3,392 | 5.2 | 19.0 | 9.0 |
| 3. தயாரிப்பு ... | 17,558 | 18,748 | 19,622 | 8.4 | 6.8 | 4.7 |
| 3.1 மரப்பயிர் பதனிடல் ... | 3,225 | 3,340 | 3,273 | 0.1 | 3.6 | – 2.0 |
| 3.2 ஏனையவை ... ... | 14,333 | 15,408 | 16,349 | 10.5 | 7.5 | 6.1 |
| 4. கட்டடவாக்கம் ... ... | 8,191 | 8,338 | 8,463 | 1.5 | 1.8 | 1.5 |
| 5 பணிகள் ... ... | 56,791 | 58,315 | 59,589 | 4.3 | 2.7 | 2.2 |
| 6. மொத்த உள்நாட்டு உற்பத்தி ... | 114,261 | 115,922 | 119,050 | 4.3 | 1.5 | 2.7 |
| 7. வெளிநாட்டிலிருந்தான தேறிய காரணி வருமானம் ... ... | –2,696 | –2,615 | –2,955 | — | — | — |
| 8. மொத்த தேசிய உற்பத்தி ... | 111,565 | 113,307 | 116,095 | 4.5 | 1.6 | 2.5 |


* தற்காலிகமானவை.

மூலம்: இலங்கை மத்திய வங்கி.

தொழில் துணைத்துறையில் தனியார் துறைக் கைத்தொழில்களின் வெளியீடு 10 சதவீதத்தினால் அதிகரித்தவேளையில் அரசதுறைக்குச் சொந்தமான கைத்தொழில்கள் வீழ்ச்சியைக் காட்டின. பணிகள் துறையின் செயலாற்றம் மிதமானதாகக் காணப்பட்டபோதிலும் சார்பு ரீதியில் அதன் கூடியளவிலான நிறையேற்றம் காரணமாகப் பொருளாதாரத்தின் முழுமையான வளர்ச்சிக்கு அது குறிப்பிடத்தக்க பங்கினை அளித்தது. 6 சதவீத வளர்ச்சியினைப் பதிவு செய்த வங்கித் தொழில், காப்புறுதி, உண்மைச் சொத்துக்களே பரந்த பணிகள் துறையினுள் முதன்மையான வளர்ச்சித்துறையாக விளங்கியது. நீர்த்தேக்கங்களின் நீர் மட்டத்தில் ஏற்பட்ட முன்னேற்றம் மின்வலு, வாயு, நலத்துறைப் பணிகளில் 3.5 சதவீத வளர்ச்சி ஏற்பட வழிவகுத்தது. ஒப்பிடுகையில் பெருந்தொகையான ஏனைய துறைகளின் வளர்ச்சிச் செயலாற்றம் 1988 இல் பொதுவாக மிதமாகக் காணப்பட்டது. இவற்றில் சில கட்டுமானத்துறை (1.5 சதவீதம்), பணிகள்துறை (2.2 சதவீதம்), மொத்த விற்பனை சில்லறை வர்த்தகத்துறை (2.7 சதவீதம்) என்பனவாகும்.

## கைத்தொழில் மூலங்களின்படியான மொத்த உள்நாட்டு உற்பத்தி

நிலையான (1982) காரணிச் செலவு விலைகளில்




இலங்கை மத்திய வங்கி.

உள்நாட்டுச் சேமிப்புக்கள் 1987 இன் ரூ. 252,000 இலட்சத்திலிருந்து 1988 இல் ரூ. 285,000 இலட்சத்திற்கு அதிகரித்துள்ளதாக மதிப்பிடப்பட்டுள்ளது. எனினும் சந்தை விலைகளிலான மொத்த உள்நாட்டு உற்பத்தியின் விகிதமான தேசிய சேமிப்புக்கள் என வரையறுக்கப்பட்ட தேசிய சேமிப்புக்களின் விகிதம் 1987 இன் 15.3 சதவீத வீதத்திலிருந்து 1988 இல் 14.8 சதவீதத்திற்கு வீழ்ச்சியடைந்தவேளையில் உள்நாட்டுச் சேமிப்புக்களின் விகிதம் இரு ஆண்டு களுக்குமிடையே மாற்றமின்றி 12.8 சதவீதமாக விளங்கியது.

கையிருப்புக்களின் மாற்றங்களை உள்ளடக்கிய மொத்த உள்நாட்டு மூலதன ஆக்கம் 1987 இன் 8 சதவீத அதிகரிப்புடனும் 1986 இன் 10 சதவீத அதிகரிப் புடனும் ஒப்பிடுகையில் 1988 இல் 12 சதவீதத்தினுல் அதிகரித்தது. அண்மைய ஆண்டுகளில் காணப்படுகின்ற தன்மையைப் போன்று மூலதனவாக்கத்திற்கான பெருமளவு உதவுதொகைகள் மொத்த மூலதனவாக்கம் 25 சதவீதத்தினுல் விரிவடைந்த அரசதுறைகளிலிருந்தே கிடைத்தது. 1987 ஆம், 1986 ஆம் ஆண்டுகளுக்குரிய தொடர்பான அதிகரிப்புக்கள் முறையே 17 சதவீதமாகவும், 23 சதவீதமாகவும் இருந்தன. அதேவேளை தனியார் துறையினதும் அரச கூட்டுத் தாபனங்களினதும் இணைந்த மூலதனவாக்கம் முன்னைய ஆண்டின் 5.6 சதவீதம் கொண்ட அதிகரிப்புடன் ஒப்பிடுகையில் 7.8 சதவீதத்தினுல் அதிகரித்தது. சந்தை விலைகளில் மொத்த உள்நாட்டு உற்பத்தியின் விகிதமாக மொத்த உள்நாட்டு மூலதனவாக்கம் 1987 இன் 23.3 சதவீதத்திலிருந்து 1988 இல் 23.1 சத வீதத்திற்குச் சிறிதளவால் வீழ்ச்சியடைந்தது.

1988 இல் தேயிலை உற்பத்தி 1965 இன் பின்னர் பதிவு செய்யப்பட்ட மிக உயர்ந்த மட்ட உற்பத்தியான 2,269 இலட்சம் கிலோக்கிருாம்களுக்கு 6 சதவீதத்தினுல் உயர்வடைந்தது. உள்நாட்டுக் குழப்பங்களின் காரணமாக ஆண்டின் இறுதிக் காலாண்டில் தென் மற்றும் ஊவாப் பிரதேசங்களின் உற்பத்தி தடைப்படாதிருந்திருக்குமாயின் 1988 இன் உற்பத்திச் செயலாற்றம் இன்னும் சிறப்பாக இருந்திருக்கும். உற்பத்தியிலேற்பட்ட அதிகரிப்பு அனைத்து மூன்று உயர வகைகளிலும் பிரதிபலித்ததுடன் தாழ்நிலத் தேயிலை மிக உயர்ந்த வளர்ச்சி யான 11 சதவீதத்தினைப் பதிவு செய்தது. ஒப்பிடுகையில் உயர்நில, மத்தியநில வளர் தேயிலைகளின் உற்பத்தி முறையே 5 சதவீதத்தினுலும், 2 சதவீதத்தினுலும் விரிவடைந்தன. தேயிலை உற்பத்தியின் வளர்ச்சி முழுவதும் தனியார்துறையி லிருந்தே கிடைத்த முன்னைய ஆண்டினைப் போலன்றி 1988 இன் உற்பத்தி அதிகரிப்பு அரசதுறை, தனியார்துறை இரண்டிலும் பகிர்ந்து காணப்பட்ட தெனினும் மிகக் கூடுதலான அதிகரிப்பு தனியார்துறையில் காணப்பட்டு மொத்த அதிகரிப்பில் 74 சதவீதத்திற்கு வகை கூறியது. வாங்கப்பட்ட தேயிலைகளிலிருந் தான உற்பத்தி உட்பட மக்கள் தோட்ட அபிவிருத்திச் சபையினதும் இலங்கை அரச பெருந்தோட்டக் கூட்டுத்தாபனத்தினதும் தேயிலை உற்பத்தி முறையே 744 இலட்சம் கிலோக்கிருக்களுக்கும், 694 இலட்சம் கிலோக்கிருாம்களுக்கும் ஒவ்வொன்றும் 3 சதவீதத்தினுல் அதிகரித்தன. இதேவேளை 1987 இல் 10 சத வீதத்தினுல் உயர்வடைந்த தனியார்துறையின் தேயிலை உற்பத்தி 1988 இல் 830 இலட்சம் கிலோக்கிருாம்களுக்கு 14 சதவீதத்தினுல் வளர்ச்சியடைந்து இவ் வாண்டில் மொத்தத் தேயிலை உற்பத்தியில் 37 சதவீதத்திற்கு வகை கூறியது. தனியார்துறையில் உற்பத்தி செய்யப்பட்டு மக்கள் தோட்ட அபிவிருத்திச் சபை யினுலும் இலங்கை அரச பெருந்தோட்டக் கூட்டுத்தாபனத்தினுலும் தயாரிக்கப் பட்ட கொழுந்துத் தேயிலையும் தனியார்துறையின் கீழ்க் கணிக்கப்படுமிடத்து மொத்த உற்பத்தியில் அதன் சார்பான பங்கு 45 சதவீதமளவிற்கு உயர்வானதாக இருந்தது.

தேயிலையின் உற்பத்திச் செலவில் ஏற்பட்ட மிகக் கூடியளவு உயர்வு 1988 இல் கவலைக்குரியதொரு விடயமாக இருந்தது. மக்கள் தோட்ட அபிவிருத்திச் சபையின் சராசரி உற்பத்திச் செலவு கிலோக்கிருமொன்றிற்கு ரூ. 46.92 இற்கு 17 சதவீதத்தினால் உயர்வுற்றவேளையில் இலங்கை அரச பெருந்தோட்டக் கூட்டுத் தாபனத்தின் அத்தகைய செலவு கிலோக்கிருமிற்கு ரூ. 44.42 இற்கு 13 சத வீதத்தினால் அதிகரித்தது. தோட்டத் தொழிலாளர்களுக்கு வழங்கப்பட்ட கூலி களில் ஏற்பட்ட அதிகரிப்பும், உள்ளீடுகளின் (வளமாக்கி போன்ற) உயர்ந்த செலவும் உற்பத்திச் செலவின் உயர்விற்கு உதவிய முக்கிய காரணிகளாகும். அதேவேளை கொழும்பு ஏலங்களில் விற்கப்பட்ட அனைத்துத் தேயிலைகளினதும் சராசரி மொத்த விலைகள் 1987 இன் கிலோக்கிருமொன்றிற்கான ரூ. 39.30 இலிருந்து 1988 இல் கிலோக்கிருமொன்றிற்கு ரூ. 42.77 இற்கு 9 சதவீதத்தினால் மாத்திரம் அதிகரித்தது. இதனால் மக்கள் தோட்ட அபிவிருத்திச் சபையின் எதிர்க்கணிய உற்பத்தியாளர் இலாபம் 1987 இன் கிலோக்கிரும் ஒன்றிற்கான ரூ. 4.12 இலிருந்து 1988 இல் கிலோக்கிருமொன்றிற்கு ரூ. 5.26 இற்கு உயர்வடைந்தது. அதேவேளை இலங்கை அரச பெருந்தோட்டக் கூட்டுத்தாபனத் தின் எதிர்க்கணிய உற்பத்தியாளர் இலாபமும் 1987 இன் கிலோக்கிருமொன்றிற் கான ரூ. 0.40 இலிருந்து 1988 இல் கிலோக்கிருமொன்றிற்கு ரூ. 2.69 இற்கு அதிகரித்தது. இது தேயிலைக் கைத்தொழில் அளவுக்கு மீறிய செலவு அதிகரிப்புக் களினால் தானாகவே ஒதுங்கிக் கொள்ளாது பன்னாட்டுச் சந்தையில் போட்டி ரீதியில் நிலைபெற வேண்டியதன் உயர்ந்த அவசியத்தை வலியுறுத்துகின்றது.

1987 இல் கடுமையான பின்னடைவினைக் கொண்டிருந்த இறப்பர் உற்பத்தி 1988 இல் 1,224 இலட்சம் கிலோக்கிரும்களை அடைந்து சிறிதளவு மீட்சியைக் காட்டியது. 1988 இல் ஏற்பட்ட உற்பத்தி அதிகரிப்பிற்குச் சார்பு ரீதியில் சாதகமான வானிலை நிலைமைகளினால் உயர்ந்த விளைவு பெறப்பட்டமையும், திருந்திய விலைகளின் நன்மைகளை அடையும்பொருட்டு மரங்களில் பாலெடுத்தல் செறிவடைந்தமையும் முக்கிய காரணங்களாக இருந்தன. தேயிலையைப்போன்றே, இறப்பரில் ஏற்பட்ட உற்பத்தி அதிகரிப்பும், அரச, தனியார்துறை இரண்டிலும் பகிர்ந்து காணப்பட்டது. முன்னைய ஆண்டின் உற்பத்திச் செயலாற்றத்திற்கு மாறாக, அரச துறையின் வெளியீடு சிறிதளவால் அதிகரித்து மொத்த உற்பத்தியில் ஏறத்தாழ 33 சதவீதத்திற்கு வகை கூறியது. மக்கள் தோட்ட அபிவிருத்திச் சபையினதும் இலங்கை அரச பெருந்தோட்டக் கூட்டுத்தாபனத்தினதும் இறப்பர் உற்பத்தி முறையே 2 சதவீதத்தினாலும், 1 சதவீதத்தினாலும் சிறிதளவால் அதிகரித்ததுடன் அவற்றின் இணைந்த உற்பத்தி 391 இலட்சம் கிலோக்கிரும் களாக விளங்கியது. இதேவேளை சிறு உடமைகளையும் உள்ளடக்கிய தனியார் துறையின் இறப்பர் உற்பத்தியும் 824 இலட்சம் கிலோக்கிரும்களுக்குச் சிறிதள வால் அதிகரித்தமையின் காரணமாக மொத்த உற்பத்தியில் இதன் பங்கினை முன்னைய ஆண்டின் மட்டமான 67 சதவீதத்தில் பேணக்கூடியதாக இருந்தது.

இறப்பர் துறையும் இவ்வாண்டில் உற்பத்திச் செலவில் கடுமையான உயர் வினைக்கொண்டிருந்தது. உற்பத்திச் செலவின் அதிகரிப்பு முக்கியமாகத் தோட்டத் தொழிலாளர்களின் அதிகரித்த கூலிகளினாலேயே ஏற்பட்டது. தனியார்துறையின் உற்பத்திச் செலவு 1987 இன் கிலோக்கிருமொன்றிற்கான ரூ. 13.95 இலிருந்து 1988 இல் கிலோக்கிருமொன்றிற்கு ரூ. 15.55 இற்கு உயர்வடைந்தது. இதே வேளை 1988 இல் இலங்கை அரச பெருந்தோட்டக் கூட்டுத்தாபனத்தின் உற்பத் திச் செலவு கிலோக்கிருமொன்றிற்கு ரூ. 23.50 இற்கு 10 சதவீதத்தினாலும், மக்கள் தோட்ட அபிவிருத்திச் சபையின் உற்பத்திச் செலவு கிலோக்கிருமொன் றிற்கு ரூ. 24.26 இற்கு 21 சதவீதத்தினாலும் அதிகரித்தன. இவ்வாண்டில் உயர்ந்த

உற்பத்திச் செலவுகள் காணப்பட்டபோதும் உற்பத்தியாளர் இலாபம் முன்னேற்ற மடைந்தமைக்கு மிகச் சாதகமான விலைகளே காரணமாகும். 1988 இல் இறப்பரின் அனைத்துத் தரங்களினதும் சராசரி ஏற்றுமதி (க.ஏ.பெ.) விலை கிலோக்கிரு மொன்றிற்கு ரூ. 37.33 இற்கு அதிகரித்து 35 சதவீதங் கொண்ட கணிசமான அதிகரிப்பினைப் பதிவு செய்தது. இதன்படி மக்கள் தோட்ட அபிவிருத்திச் சபை அதன் உற்பத்தியாளர் இலாபத்தினை 1987 இன் கிலோக்கிருமொன்றிற்கான ரூ. 0.26 இலிருந்து 1988 இல் கிலோக்கிருமொன்றிற்கு ரூ. 5.25 இற்கு அதிகரிக்கக் கூடியதாக இருந்தவேளையில் இலங்கை அரச பெருந்தோட்டக் கூட்டுத்தாபனம் முன்னைய ஆண்டின் கிலோக்கிருமொன்றிற்கான ரூ. 1.40 கொண்ட எதிர்க்கணிய இலாபத்திற்கெதிராக 1988 இல் கிலோக்கிருமொன்றிற்கு ரூ. 3.83 கொண்ட உற்பத்தியாளர் இலாபத்தைப் பதிவு செய்தது.

1986 இலும், 1987 இன் தொடக்கப் பகுதியிலும் முக்கியமாகத் தெங்கு வளரும் பிரதேசங்களில் நிலவிய நீண்ட வரட்சியின் தாக்கத்தின் கீழ் தெங்கு உற்பத்தி 1988 இலும் தொடர்ந்து இரண்டாவது ஆண்டாகக் கடுமையான பின்னடைவினைக் கொண்டிருந்தது. 1987 இல் 22,920 இலட்சம் காய்களுக்கு வீழ்ச்சியடைந்த மொத்தத் தெங்கு உற்பத்தி 1988 இல் 19,330 இலட்சம் காய்களுக்கு மேலும் 16 சதவீதத்தினால் குறைவடைந்தது. இது 1977 இன் பின்னர் ஏற்பட்ட மிகக் குறைந்த மட்டமாகும். குறைவடைந்த உற்பத்தி 1988 இல் தேங்காய்த் துருவல், தேங்காயெண்ணெய் என்பனவற்றின் உற்பத்திக்கான காய்களின் கிடைப்பனவில் தொடர்ச்சியான வீழ்ச்சியை ஏற்படுத்தியது. இதன் விளைவாகத் தேங்காய்த் துருவலின் உற்பத்தி 55 சதவீதத்தினாலும், தேங்காயெண்ணெயின் உற்பத்தி 52 சதவீதத்தினாலும் வீழ்ச்சியடைந்தன. உலர்த்திய தேங்காய், உடன் காய் என்பனவற்றின் ஏற்றுமதி அளவுகளும் முறையே 43 சதவீதத்தினாலும், 28 சதவீதத்தினாலும் வீழ்ச்சியடைந்தன.

இதேவேளை மூன்று முக்கிய தெங்கு உற்பத்திகளினது விலைகள் பன்னாட்டுச் சந்தைகளில் கணிசமாக அதிகரித்தன. காய் ஒன்றுக்கான சராசரி க.ஏ.பெ. விலை 1987 இன் ரூ. 2.64 இலிருந்து 1988 இல் ரூ. 4.00 ஆக உயர்வடைந்தது. எனினும், ஏற்றுமதிகளுக்கெனப் பதனிடுவதற்குக் கிடைக்கக்கூடியதாகவிருந்த காய்கள் மிகவும் குறைவானதாகவிருந்தமையால் அதிகரித்த விலையின் அதிகூடிய நன்மையைப் பெற நாட்டினால் முடியவில்லை. தெங்கு உள்ளீட்டு உற்பத்திகளின் மொத்த ஏற்றுமதி அளவு 1987 இன் 5,380 இலட்சம் காய்களிலிருந்து 1988 இல் 2,240 இலட்சம் காய்களுக்கு 58 சதவீதத்தினால் கணிசமானளவில் வீழ்ச்சியடைந்தது. தேயிலை, இறப்பர் என்பன போலவே தேங்காயின் சராசரி உற்பத்திச் செலவும் 1988 இல் அதிகரித்ததுடன் 1987 இன் மதிப்பிடப்பட்ட காயொன்றுக்கான ரூ. 0.99 உடன் ஒப்பிடுகையில் 1988 இல் காயொன்றுக்கான செலவு ரூ. 1.21 ஆக விளங்கி 22 சதவீத அதிகரிப்பைப் பதிவு செய்தது.

1988 இல் கணிசமான உற்பத்தி இலாபங்களைப் பதிவு செய்த பயிராக நெல் விளங்கியது. 1988 இல் நெல் உற்பத்தி 25 இலட்சம் மெற்றிக் தொன்களாகத் தற்காலிகமாக மதிப்பிடப்பட்டதுடன் (1,180 இலட்சம் புசல்கள் நெல் அல்லது 17 இலட்சம் மெற்றிக் தொன்கள் அரிசி) இது 16 சதவீத அதிகரிப்பைக் காட்டியது. எனினும், இது 1985 இல் பெறப்பட்ட உச்ச உற்பத்தியான 27 இலட்சம் மெற்றிக் தொன்களைவிட 7 சதவீதம் குறைவானதாகும். விரயங்களுக்கும் விதை நெல் தேவைகளுக்கும் சீராக்கம் செய்யப்பட்டதன் பின்னர் நுகர்வுக்காகக் கிடைக்கத்தக்க அரிசி 15 இலட்சம் மெற்றிக் தொன்களாக மதிப்பிடப்பட்டுள்ளது. இது 1987 இல் அடையப்பட்ட 80 சதவீதத்திற்கு எதிராக, மதிப்பிடப்பட்ட

ஆண்டு நுகர்வில் ஏறத்தாழ 88 சதவீதத்தினை ஈடுசெய்யப் போதுமானதாக விளங்கியது.

நெல் உற்பத்தியின் அதிகரிப்பு 1987/88 பெரும்போகம் 1988 சிறுபோகம் ஆகிய இரண்டிலும் பிரதிபலித்தது. 1987/88 பெரும்போக உற்பத்தி 15.2 இலட்சம் மெற்றிக் தொன்களாக (731 இலட்சம் புசல்கள்) மதிப்பிடப்பட்ட தோடு இது முன்னைய பெரும்போகத்தினைவிட 132,193 மெற்றிக் தொன்கள் அல்லது 9 சதவீதம் அதிகமானதாகும். ஒப்பிடுகையில் 1988 இன் சிறுபோக உற்பத்தி 9 இலட்சம் மெற்றிக் தொன்களாக (450 இலட்சம் புசல்கள்) மதிப் பிடப்பட்டதோடு இது முன்னைய சிறுபோகத்துடன் ஒப்பிடுகையில் 28 சதவீதமான கணிசமான அதிகரிப்பாகும். வடக்கு, கிழக்கு மாகாணங்களில் தொடர்ந்து நில விய சீரற்ற நிலைமைகளும், உற்பத்தியில் எதிர்க்கணியத் தாக்கத்தை ஏற்படுத்திய பெரும்போகத்தில் தண்ணீர் கிடைக்கப்பிந்தியமையும் இல்லாதிருந்தால் 1988இல் மொத்த உற்பத்திச் செயலாற்றம் கணிசமானளவு கூடியதாகவிருந்திருக்கும்.

1988 இல் நெல் உற்பத்தி அதிகரித்தமைக்கு விதைக்கப்பட்டதும் அறுவடை செய்யப்பட்டதுமான பரப்பளவு கூடியதாக இருந்தமையே முதன்மைக் காரண மாகும். மொத்தமாக விதைக்கப்பட்ட பரப்பு 84,096 எக்டேயர்களால் அல்லது 11 சதவீதத்தால் 865,322 எக்டேயர்களுக்கு அதிகரித்தது. மறுபக்கத்தில் மதிப்பிடப்பட்ட சராசரி விளைச்சல் 3,419 கிலோக்கிறும்களாக விளங்கி முன்னைய ஆண்டினைவிட 4 சதவீத வீழ்ச்சியைப் பதிவு செய்தது. பெரும்போகத்தில் விதைக்கப்பட்ட பரப்பு 7 சதவீதத்தால் 544,628 எக்டேயர்களுக்கு அதிகரித்த வேளையில் சிறுபோகம் 17 சதவீதத்தால் 320,694 எக்டேயர்களுக்குக் குறிப்பிடத் தக்களவு உயர்ந்து முன்னேற்றமடைந்த காலநிலைமைகளைப் பிரதிபலித்தது. இதே வேளை 1988 இல் அறுவடை செய்யப்பட்ட மொத்தப் பரப்பளவு 19 சதவீதத் தால் 811,034 எக்டேயர்களுக்கு அதிகரித்தது. 1987/88 பெரும்போகத்தில் அறுவடை செய்யப்பட்ட பரப்பளவு 15 சதவீதத்தாலும் 1988 சிறுபோகத்தில் 27 சதவீதத்தாலும் உயர்வடைந்தது. விதைக்கப்பட்ட பரப்பளவிற்கும் அறுவடை செய்யப்பட்ட மொத்தப் பரப்பளவுக்குமிடையிலான வேறுபாடான பயிர் அழி வின் அளவு முன்னைய ஆண்டினைவிட 1988 இல் கணிசமானளவு குறைவாகும்.

1988 இல் உத்தரவாத விலைத்திட்டத்தின் கீழ் நெல் சந்தைப்படுத்தும் சபையால் கொள்வனவு செய்யப்பட்ட நெல் 105,497 மெற்றிக் தொன்களாக (5,055,000 புசல்கள்) விளங்கி 1987 இல் கொள்வனவு செய்யப்பட்ட தொகை யினைவிட 65 சதவீத அதிகரிப்பைக் காட்டியது. பெரும்போகத்திலும் சிறு போகத்திலும் முக்கிய நெல் வளரும் பகுதிகளில் காணப்பட்ட உயர்வான உற்பத்தியே இவ்வதிகரிப்புக்கு உதவிய முக்கிய காரணியாகும். இதேவேளையில் வளமாக்கி விலைகளின் அதிகரிப்பால் உருவான பாதகமான தாக்கத்தைத் தணிப் பதற்கும் நெல் வேளாண்மையாளர்களுக்குக் கூடிய இலாபத்தைக் கொடுப்பதற் காகவும் நெல்லின் உத்தரவாத விலை 1988 ஓகத்தில் புசலொன்றுக்கு ரூ. 70 இலிருந்து ரூ. 80 ஆக மேனேக்கி உயர்த்தப்பட்டது. உத்தரவாத விலை மேனேக்கித் திருத்தப்பட்டபோதிலும் இவ்வாண்டில் நெல்லின் திறந்த சந்தை விலைகள் உத்தர வாத விலையிலும் மிகவும் கூடுதலானதாகவே தொடர்ந்தும் விளங்கின. 1988 இல் நெல்லின் சராசரி திறந்த சந்தை விலை புசலொன்றுக்கு ரூ. 93.45 ஆக விளங்கி முன்னைய ஆண்டினைவிட 5 சதவீத அதிகரிப்பைக் காட்டியது.

1988 இல் மிகவும் வலுவான வளர்ச்சியைப் பதிவு செய்த பயிர் கரும்பாகும். 1987 இல் 15 சதவீதத்தால் 29,298 மெற்றிக் தொன்களுக்கு வீழ்ச்சியடைந்த மொத்தச் சீனி உற்பத்தி 1988 இல் 53,522 மெற்றிக் தொன்களுக்கு 83 சத வீதத்தினுல் உயர்வடைந்தது. பெல்வத்தையிலும், செவனகலவிலும் உள்ள தொழிற்சாலைகள் அவற்றின் உற்பத்தியை இரண்டு மடங்கிற்கும் மேலாக முறையே 29,972 மெற்றிக் தொன்களுக்கும், 11,039 மெற்றிக் தொன்களுக்கும் அதிகரித்தன. இங்குரான தொழிற்சாலை அதன் உற்பத்தியை 28 சதவீதத்தால் 11,084 மெற்றிக் தொன்களுக்கு உயர்த்தியது. மாருக கந்தளாய் தொழிற்சாலையின் சீனி உற்பத்தி முக்கியமாக அறுவடை செய்யப்பட்ட பரப்பளவு குறைந்தமையாலும் கந்தளாய் நீர்த்தேக்கத்திலிருந்து கரும்புச் செய்கைக்கான நீர் வழங்கல் குறைவடைந்ததன் விளைவாகச் சராசரி விளைச்சல் வீழ்ச்சியடைந்தமையினுலும், 37 சதவீத வீழ்ச்சியைப் பதிவு செய்து அதிகளவு பின்னடைவினைக் கொண்டிருந்தது. முற்றிலும் பெல்வத்தைத் தொழிற்சாலையிலிருந்தே கிடைத்த தனியார் துறையின் சீனி உற்பத்தி 1988 இல் மொத்தச் சீனி உற்பத்தியின் 56 சதவீதத்திற்கு வகை கூறியது. உள்ளூர்க் குழப்பத்தின் அதிகரிப்பினைத் தொடர்ந்து நாலாம் காலாண்டில் தொழிலாளர் பற்ருக்குறையும் மின் வழங்கலில் துண்டிப்புக்களும் ஏற்படாதிருந்திருப்பின் சீனித் துறையின் மொத்தச் செயலாற்றம் அதிகளவு குறிப்பிடத்தக்கதாயிருந்திருக்கும்.

சிறு ஏற்றுமதிப் பயிர்களின் ஏற்றுமதி வளர்ச்சி முன்னைய ஆண்டின் பாதிக்கப்பட்ட மட்டங்களிலிருந்து முன்னேற்றமான உற்பத்திச் செயலாற்றத்தைக் காட்டுகிறது. 1988 இல் கணிசமாக முன்னேற்றமடைந்த செயற்பாட்டைக் காட்டிய பயிர்கள் கோப்பி, கராம்பு, சாதிக்காய், சாதிப்பத்திரி என்பனவாகும். மிளகு, எள்ளு, மரமுந்திரிப் பருப்பு ஆகியவற்றின் ஏற்றுமதி அளவுகளில் குறிப்பிடத்தக்களவு அதிகரிப்புக்கள் அவதானிக்கப்பட்டதுடன் இது இவற்றின் உற்பத்தியிலேற்பட்ட அதிகரிப்பை எடுத்துக் காட்டியது. முதன்மை உற்பத்திப்பகுதிகளில் காணப்பட்ட சாதகமான கால நிலைமை அதிகரித்த வளமாக்கிப் பயன்பாட்டுடன் இணைந்து 1988 இல் பெரும்பாலான சிறு ஏற்றுமதிப் பயிர்களின் உற்பத்தி அதிகரிப்புக்கு உதவியது. ஏற்றுமதி அளவுகளிலேற்பட்ட வீழ்ச்சிகளிலிருந்து கணிக்கும்போது கறுவா, கொக்கோ, ஏலக்காய் ஆகிய மூன்று முக்கிய விடயங்களின் உற்பத்தி 1988 இல் வீழ்ச்சியுற்றதாகத் தோன்றுகிறது. 1988 இன் நான்காம் காலாண்டில் தென் மாகாணத்தில் நிலவிய அமைதியற்ற நிலைமைகள் கறுவா உற்பத்தியைப் பாதித்தன.

தற்காலிக மதிப்பீடுகள் 1988 இல் மீன் உற்பத்தி 4 சதவீதத்தால் உயர்வடைந்து 197,536 மெற்றிக் தொன்களை அடைந்தமையைக் காட்டுகின்றன. வடக்கு, கிழக்குப் பகுதிகளில் மீன்பிடி நடவடிக்கைகள் மெதுவாக மீட்சியடைந்தமையின் காரணமாக உற்பத்தி அதிகரிப்பு மிதமாகவே விளங்கியது. உள்ளூர் குழப்பங்கள் காரணமாக ஆண்டு இறுதியில் தென் மாகாணத்தில் உற்பத்தி வீழ்ச்சியடைந்தமையும் பாதகமான தாக்கத்தைக் கொண்டிருந்தது. கடந்த காலத்தைப்போலவே, மொத்த மீன் உற்பத்தியில் பெரும் பங்கிற்குத் தொடர்ந்தும் தனியார்துறை வகை கூறியதுடன் கடற்ரொழில் கூட்டுத்தாபனம் தனியார் துறையிடமிருந்து மீனைக் கொள்வனவு செய்வதிலேயே முக்கியமாக ஈடுபட்டிருந்தது. குடிமதிப்பு புள்ளிவிபரத் திணைக்களத்தின் தற்காலிகத் தரவுகளின்படி 1988 இல் மொத்தப் பால் உற்பத்தி (எருமைப் பால் உட்பட) 2,260 இலட்சம் இலீற்றர்களென மதிப்பிடப்பட்டு 2 சதவீதமான சிறு அதிகரிப்பைப் பதிவு செய்த வேளையில் மொத்த முட்டை உற்பத்தி 7,780 இலட்சமாக மதிப்பிடப்பட்டு முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் 5 சதவீத வீழ்ச்சியைப் பதிவு செய்தது.

1988 இல் ஆங்காங்கே தோன்றிய உள்நாட்டுக் குழப்பங்களால் சூழப்பட்ட நிச்சயமற்ற நிலையில் கைத்தொழில் வளர்ச்சி மெதுவான போக்கினைக் கொண்டிருந்தது. உண்மை நியதியில் கைத்தொழில் வெளியீடுகளின் பெறுமதி 1987 இன் 8 சதவீதத்துடனும் 1986 இன் 12 சதவீதத்துடனும் ஒப்பிடுகையில் இவ்வாண்டில் 6 சதவீதத்தால் அதிகரித்தது. முன்னைய ஆண்டைப்போலவே கைத்தொழில் வெளியீட்டின் அதிகரிப்பு முற்றாக உற்பத்திப் பெறுமதி 11 சதவீதத்தால் உயர்வடைந்த தனியார்துறைக் கைத்தொழில்களிலிருந்தே ஏற்பட்டது. மாறாக, அரசதுறைக் கைத்தொழில்களின் வெளியீட்டின் பெறுமதி தொடர்ச்சியான இரண்டாவது ஆண்டாக 1 சதவீதத்தால் வீழ்ச்சியுற்றது. மின் வழங்கலில் தடங்கல், வேலைத்தலங்களில் குறைவான வரவு, சில பகுதிகளில் வழங்கல் அமைப்பில் ஏற்பட்ட இடையூறுகள் ஆகியவை 1988 இல் கைத்தொழில் வெளியீட்டு வளர்ச்சி குறைவாக விளங்கியமைக்கான முக்கிய காரணிகளுள் அடங்கும்.

1988 இல் உற்பத்தியில் அதிகரிப்புக்களைப் பதிவு செய்த கைத்தொழில் துணைத்துறைகளாக அடிப்படை உலோக உற்பத்திகள் (21 சதவீதம்), புடவை, அணியும் ஆடைகளும் தோல் உற்பத்திகளும் (12 சதவீதம்), தயாரிக்கப்பட்ட உலோக உற்பத்திகள் (9 சதவீதம்), இரசாயனங்கள், பெற்றோலியமும் பிளாத்திக்கு உற்பத்திகளும், உலோகமல்லா கனிப்பொருள் உற்பத்திகள் ஒவ்வொன்றும் (5 சதவீதம்) என்பன விளங்கின. மாறாக, மர, மர உற்பத்தித்துறையின் வெளியீடு 17 சதவீதத்தால் வீழ்ச்சியடைந்தது. முதலீட்டு ஊக்குவிப்பு வலயத்திற்குள்ளும் வெளியேயும் அணியும் ஆடைக் கைத்தொழிலின் தொடர்ச்சியான விரிவாக்கம் புடவை அணியும் ஆடைகளும், தோல் உற்பத்திகளும் கைத்தொழிலின் உயர்ந்த மட்ட வெளியீட்டுக்கு முக்கிய காரணியாகும். உலோகமல்லா கனிப்பொருள் உற்பத்திகள் துறையில் இம்முன்னேற்றத்திற்கு கல்நார்த் தகடுகள், கண்ணாடி உற்பத்திகள், மட்பாண்டங்கள் போன்றவற்றைத் தயாரிக்கும் தனியார் துறைக் கைத்தொழில்களின் அதிகரித்த உற்பத்தியே பெருமளவுக்குக் காரணமாகும்.

1988 இல் அரசதுறைக் கைத்தொழில் வெளியீட்டில் ஏற்பட்ட வீழ்ச்சி பல முக்கிய அரசதுறைக் கைத்தொழில் முயற்சிகளில் உற்பத்தி வீழ்ச்சியடைந்தமையின் விளைவாக ஏற்பட்டது. வெளியீட்டில் வீழ்ச்சிகளைப் பதிவு செய்தவற்றில் பிரித்தானிய இலங்கைக் கூட்டுத்தாபனம் (60 சதவீதம்), இலங்கை கனிப்பொருள், மணல் (46 சதவீதம்), அரச மரம் (43 சதவீதம்), இலங்கை எண்ணெய் கொழுப்பு (36 சதவீதம்), அரச வன்கலம் (25 சதவீதம்), அரச வடிசாலை (23 சதவீதம்), தேசிய தாள் (8 சதவீதம்), இலங்கை ரயர் (6 சதவீதம்), தேசிய புடவை (5 சதவீதம்) ஆகிய கூட்டுத்தாபனங்களும் வரையறுக்கப்பட்ட அரச இறப்பர் தயாரிப்புக் கூட்டு நிலையமும் (15 சதவீதம்) விளங்கின. ஆண்டின் பின்னரைப் பகுதியில் மின் விநியோகத்திற்கு ஏற்பட்ட தடைகள், ஊழியர் வரவின்மை, வழங்கல் நிகழ்ச்சித் திட்டங்கள் தடைப்பட்டமை என்பன அரச துறைக் கைத்தொழில் வெளியீட்டினைக் குறைக்க உதவிய காரணிகளில் அடங்கும். இவ்வாண்டில் வெளியீட்டில் அதிகரிப்புக்களைப் பதிவு செய்த கைத்தொழில் கூட்டுத்தாபனங்களாக இலங்கை சீனி (47 சதவீதம்), இலங்கை உருக்கு (21 சதவீதம்), இலங்கைப் பெற்றோலியம் (4 சதவீதம்) ஆகிய கூட்டுத்தாபனங்கள் விளங்கின. அறுவடை செய்யப்பட்ட பரப்பளவு அதிகரித்தமையால் செவனகல, இங்குரான தொழிற்சாலைகளின் வெளியீடுகளில் ஏற்பட்ட கணிசமான அதிகரிப்புக்கள் இலங்கை சீனிக் கூட்டுத்தாபனத்தின் உயர்ந்தமட்ட வெளியீட்டுக்கு உதவிய வேளையில் இறக்குமதிகளின் மூலம் மூலப்பொருள்களின் அதிகரித்த நிரம்பல் உருக்குக் கூட்டுத்தாபனத்தின் அதிகரித்த உற்பத்திக்கு முக்கிய பொறுப்பாக இருந்தது.

முன்னைய இரண்டு ஆண்டுகளைப் போலவே 1988 இலும் கைத்தொழில் கூட்டுத்தாபனங்களுக்கான வரவுசெலவுத் திட்ட மாற்றல்கள் மிதமாகவே காணப் பட்டன. இவ்வாண்டில் அம்மாற்றல்கள் 1987 இன் ரூ. 2,910 இலட்சத்துடனும், 1986 இன் ரூ. 4,890 இலட்சத்துடனும் ஒப்பிடுகையில் ரூ. 4,350 இலட்சமாக விளங்கின. 1988 இல் செய்யப்பட்ட மாற்றல்களில் ரூ. 2,430 இலட்சம் அல்லது 56 சதவீதம் மூலதன மாற்றல்களையும் ரூ. 1,920 இலட்சம் அல்லது 44 சதவீதம் நடைமுறை மாற்றல்களையும் கொண்டிருந்தது. நாலாவது தொடர்ச்சியான ஆண் டாக இலங்கைச் சீனிக் கூட்டுத்தாபனம் 1988 இல் செய்யப்பட்ட வரவு செலவுத் திட்ட மாற்றல்களின் மிகப் பெரிய பங்கைப் பெற்றது.

நிச்சயமற்ற நிலைமை தொடர்ந்துவரும் வேளையிலும் 1988 இல் பெறப்பட்ட முதலீட்டு ஒப்புதல்களின் எண்ணிக்கை பிரதிபலிப்பதுபோல கைத்தொழில் துறை யில் முதலீட்டாளர்கள் தொடர்ந்தும் நாட்டம் தொண்டிருந்தனர். 1988 இல் கொழும்பு பெரும்பாக பொருளாதார ஆணைக்குழு 31 செயற்றிட்டங்களுக்கு ஒப்புதலளித்ததுடன் 1988 இறுதியில் ஒப்புதலளிக்கப்பட்ட மொத்தச் செயற் றிட்டங்களின் எண்ணிக்கை 283 ஆக விளங்கியது. 1988 இல் ஒப்புதலளிக்கப் பட்ட செயற்றிட்டங்களின் முதலீட்டு உள்ளார்ந்த வளம் ரூ. 11,200 இலட்சம் கொண்ட வெளிநாட்டுக் கூறை உள்ளடக்கி ரூ. 17,270 இலட்சமாக மதிப்பிடப் பட்டது. இதேவேளை வெளிநாட்டு முதலீட்டு மதியுரைக்குழு முன்னைய ஆண்டின் 41 செயற்றிட்டங்களுடன் ஒப்பிடுகையில் 1988 இல் 45 கைத்தொழிற் செயற் றிட்டங்களுக்கு ஒப்புதலளித்தது. இச் செயற்றிட்டங்கள் ரூ. 2,250 இலட்சம் கொண்ட வெளிநாட்டுக் கூறை உள்ளடக்கிய ரூ. 9,540 இலட்சத்தை மொத்த முதலீடாக எதிர்பார்த்தன. முன்னைய ஆண்டின் 364 செயற்றிட்டங்களுடன் ஒப்பிடுகையில் இவ்வாண்டில் 608 செயற்றிட்டங்களுக்கு ஒப்புதலளித்த உள் நாட்டு முதலீட்டு மதியுரைக் குழுவினாலேயே 1988 இல் கைத்தொழில் ஒப்புதல் களில் அதிகூடிய அதிகரிப்பு ஏற்பட்டது. இச் செயற்றிட்டங்களில் மொத்தமாக எதிர்பார்க்கப்பட்ட முதலீடு ரூ. 11,420 இலட்சமாக விளங்கி ஏறத்தாழ 19,000 ஆட்களுக்குத் தொழில் வழங்கும் ஆற்றலைக் கொண்டிருந்தது.

1988 இல் பணவீக்க போக்குகள் நம்பிக்கையூட்டுவதாக அமையவில்லை. 1988 இல் கொழும்பு நுகர்வோர் விலைச் சுட்டெண் 1987 இன் சராசரி மட்டத் தினைவிட 14 சதவீத அதிகரிப்பைக் காட்டியது. இது ஏறத்தாழ 1987 இல் பதிவு செய்யப்பட்ட அதிகரிப்பின் இரு மடங்காகும். புள்ளிக்குப் புள்ளி அடிப்படையில் அதாவது 1987 திசெம்பரினைவிட 1988 திசெம்பரில் கொழும்பு நுகர்வோர் விலைச் சுட்டெண்ணின் ஆண்டு அதிகரிப்பு 15 சதவீதமாக விளங்கியதுடன் அதே யளவிற்கு ஆண்டு இறுதி பணவீக்க வீதத்தையும் குறித்துக் காட்டியது. 1988 சனவரியில் அதிகளவு உயர்வடைந்த நுகர்வு விலைகள் அதன் பின்னர் கூடியளவு மிதமான போக்கினைக் கொண்டிருந்தாலும் ஆண்டின் இறுதி இரு மாதங்களிலும் அதிகரித்துவரும் உள்நாட்டுக் குழப்பங்களினால் ஏற்பட்ட வழங்கல் குறைபாடு களின் காரணமாகக் கணிசமானளவுக்கு அதிகரித்தன. இதேவேளை மொத்த விற்பனை விலைச் சுட்டெண்ணினால் அளவிடப்பட்டவாறு முதலாந்தரச் சந்தை மட்ட விலைகளும் இதே மாதிரியான அதிகரிப்பைப் பதிவு செய்து பொருளாதாரத் தில் உறுதியானதும் விரிவானதுமான விலைத் தாக்கத்தை எடுத்துக் காட்டியது.

1985–1987 காலப்பகுதியில், கொழும்பு நுகர்வோர் விலைச் சுட்டெண் ணின் சராசரி அதிகரிப்பு வீதம் ஒற்றை எண் மட்டத்திலே விளங்கிப் பெருமள விற்கு மிதமான பணவீக்கத் தாக்கங்களின் தன்மையைக் காட்டியது. இப் பின்னணியில் 1988 இல் இரட்டை எண்ணிற்குப் பணவீக்கம் மீண்டும் அதிகரித் தமை கவனிக்கப்பட வேண்டிய கவலைக்குரியதொரு விடயமாகும்.

1988 இல் விலைகளின் அதிகரிப்புக்குப் பல காரணிகள் காரணமாயிருந்தன. வரட்சியின் காலங்கடந்த தாக்கம், செயற்கையான நிரம்பல் தட்டுப்பாடுகளை விளைவித்த உள்நாட்டுக் குழப்பங்கள், மின்வலு மீதான உயர்ந்த தீர்வை, புகையிலை மீதும் மதுபானம் மீதுமான கலால் தீர்வை திருத்தப்பட்டமை ஆகியன இவற்றுள் மிகவும் குறிப்பிடத்தக்கவையாகும். விலைகள் மீது கணிசமான கேள்வித் தாக்கமும் காணப்பட்டது. பணநிரம்பலின் அதிகளவான அதிகரிப்பும் பொருளாதாரத்தின் பல முக்கிய துறைகளில் வழங்கப்பட்ட கணிசமான கூலி அதிகரிப்புக்களும் ஆண்டின் பெரும்பகுதியில் தாக்கம் மிக்க கேள்வியை உயர்வானதாகப் பேணுவதற்கு உதவின. உள்நாட்டு நாணயத்தின் நியதியில் இறக்குமதி விலைகளை உயர்வடையச் செய்த ரூபாவின் மிதமான பெயரளவிலான பெறுமானத் தேய்வும் காணப்பட்டது. ஆண்டின் இறுதி இரண்டு மாதங்களிலும் அதிகரித்த உள்நாட்டுக் குழப்பங்களும் இதன் விளைவாகப் போக்குவரத்துப் பணிகளில் தடங்கல் ஏற்பட்டமையும் நிரம்பல் தட்டுப்பாடுகளை விளைவித்து, இக்காலப் பகுதியில் பெரும்பாலான நுகர்வு விடயங்களின் விலை உயர்வுக்கு வழியமைத்தன. 1988 இல் பொருளாதாரத்தின் விலைத் தாக்கம் உணவு விலைகளிலேயே கூடியளவிற்குப் பிரதிபலித்தது. மொத்தச் சுட்டெண்ணில் 62 சதவீத நிறையைக் கொண்டுள்ள உணவுக்கான துணைச் சுட்டெண் முன்னைய ஆண்டின் 9 சதவீத அதிகரிப்புடன் ஒப்பிடுகையில் 15 சதவீதத்தால் உயர்வடைந்தது.

1988 இல் உற்பத்தியாளர் விலைகள் நுகர்வு விலைகளைவிடச் சிறிதளவு உயர்வான வீதத்தில் உயர்வடைந்தன. மொத்த விற்பனை விலைச் சுட்டெண் 1987 இல் பதிவு செய்யப்பட்ட 13.4 சதவீத அதிகரிப்புடன் ஒப்பிடும்போது 17.8 சதவீத ஆண்டு வளர்ச்சி வீதத்தைப் பதிவு செய்தது. புள்ளிக்குப் புள்ளி அடிப்படையில் அதாவது 1987 திசெம்பரைவிட 1988 திசெம்பரில் இச்சுட்டெண் 9.3 சதவீதத்தால் உயர்வடைந்தது. நுகர்வு விலைகளைப் போலவே உற்பத்தியாளர் விலைகளில் ஏற்பட்ட அதிகரிப்பும் கூடுதலாக உணவு விடயங்களிலேயே பிரதிபலித்தது. 1987 இன் 19 சதவீத உயர்வுடன் ஒப்பிடுகையில் இவ்வாண்டில் உணவுக்கான துணைச் சுட்டெண் 22 சதவீதத்தால் உயர்வடைந்தது. இதே வேளையில் நுகர்வுப் பொருட்களுக்கான துணைச் சுட்டெண் 1987 இன் 18 சதவீதத்துடன் ஒப்பிடுகையில் 1988 இல் 20 சதவீதத்தால் உயர்வடைந்தது. துறைவாரியான பகுப்பாய்வில் ஏற்றுமதி விடயங்களின் விலைகள் முன்னைய ஆண்டின் 38 சதவீத அதிகரிப்புடன் ஒப்பிடுகையில் 1988 இல் 28 சதவீதத்தால் உயர்வடைந்தன.

அரச ஊழியர்கள் தொடர்பான சம்பளங்கள், தொழில்நிலைப் பிரிவு என்பன மீதான நிருவாக சீரமைப்புக் குழுவின் விதந்துரைப்புக்களின் நடைமுறைப்படுத்தலைத் தொடர்ந்து கூலிகள்துறை 1988 ஆம் ஆண்டு சில முக்கிய அபிவிருத்திகளைக் கண்டது. முன்மொழியப்பட்ட அதிகரிப்பில் அரைப்பங்கு 1988 சனவரியிலிருந்து செலுத்தப்பட்ட வேளையில் மிகுதி 1988 நவெம்பரிலிருந்து வழங்கப்பட்டது. இத்திருத்தங்களைத் தொடர்ந்து இவ்வாண்டில் எல்லா அரச ஊழியர்களின் சராசரி கூலி வீதச் சுட்டெண் 31 சதவீதத்தால் அதிகளவில் அதிகரித்தது. பல அரச கூட்டுத்தாபனங்களும் நியதிச் சபைகளும் 1988 இல் அவற்றின் கூலி வீதங்களை மேனோக்கித் திருத்தின. தனியார்துறையில் கூலிச் சபைகளுக்குட்பட்ட பல வர்த்தகங்கள் இவ்வாண்டில் தங்கள் ஆகக் குறைந்த கூலிகளை உயர்த்தின. இதனைத் தொடர்ந்து கூலிகள் சபையினால் உள்ளடக்கப்பட்ட எல்லா ஊழியர்களினதும் ஆகக் குறைந்த கூலி வீதச் சுட்டெண் முன்னைய ஆண்டின் 6 சதவீத அதிகரிப்புடன் ஒப்பிடுகையில் 21 சதவீதத்தால் அதிகளவில் உயர்வடைந்தது. பெருந்தோட்டத்துறையில் காணப்பட்ட கணிசமானளவு கூலி உயர்வின் விளைவாக

வேளாண்மையிலுள்ள தொழிலாளர்களுக்கான ஆகக் குறைந்த கூலி வீதச் சுட்டெண் 1988 இல் 25 சதவீதத்தால் உயர்வடைந்தது.

கிடைக்கத்தக்க மதிப்பீடுகளின்படி 1988 இல் அரச (அரச, அரசுசார்) தனியார்துறைகள் இரண்டிலும் தொழில்நிலை முன்னைய ஆண்டு மட்டங்களுடன் ஒப்பிடுகையில் சிறிதளவால் அதிகரித்தது. அரசதுறையில் பாதுகாப்புப் பணிகள், கல்வி, நலத்துறை, போக்குவரத்து, மாகாண நிருவாகம் போன்ற நடவடிக்கைகளில் தொழில்நிலை இவ்வாண்டில் அதிகரித்தவேளையில் பெருந்தோட்டங்கள், வங்கித்தொழில், வர்த்தகம், கைத்தொழில், கட்டுமானம் ஆகியவற்றில் தொழில் நிலை வீழ்ச்சியடைந்தது.

மத்திய வங்கியால் நடாத்தப்பட்ட அரசதுறை தொழில்நிலை மீதான அளவையின் தற்காலிக மதிப்பீடுகளின்படி அரசதுறையில் மொத்தமாகத் தொழில் புரிவோரின் எண்ணிக்கை 1987 இறுதியின் 1,222,000 மட்டத்திலிருந்து 1988 இறுதியில் 1,227,400 இற்கு 0.4 சதவீதத்தால் சிறிதளவால் அதிகரித்தது. இதில் 752,900 பேர் அரசுசார் நிறுவனங்களில் தொழில்புரியும் வேளையில் எஞ்சிய 474,500 பேர் அரச நிறுவனங்களில் தொழில் புரிந்தனர். அரச கூட்டுத்தாபனங்கள், மேலாண்மைச் சபைகள், நியதிச் சபைகள், ஏனைய நிறுவனங்கள் போன்ற அரசுசார் நிறுவனங்களிலுள்ள தொழில்நிலை 0.03 சதவீதத்தால் மிகச் சிறிதளவில் மட்டுமே அதிகரித்தபோதிலும் இவ்வதிகரிப்பு அண்மைய ஆண்டுகளில் இத்துறைகளில் தொழில்நிலையில் அவதானிக்கப்பட்ட வீழ்ச்சியடையும் போக்கின் பின்னணியில் நோக்கப்பட வேண்டும். 1988 இல் குறிப்பிடத்தக்க அதிகரிப்புக்களைப் பதிவு செய்த அரசுசார் நிறுவனங்களாகப் பிரதேச போக்குவரத்துச் சபைகள், வர்த்தகக் கூட்டுத்தாபனங்கள், பணிகளை அடிப்படையாகக் கொண்ட நிறுவனங்கள் உயர் கல்வி நிறுவனங்கள் என்பன விளங்கின.

அரச அமைச்சுக்களையும் திணைக்களங்களையுக் உள்ளடக்கிய அரச நிறுவனங்களிலுள்ள தொழில்நிலை 1988 இறுதியில் 1.1 சதவீதத்தால் 474,500 ஊழியர்களுக்கு அதிகரித்தது. அதிகூடிய அதிகரிப்பு பாதுகாப்புப் பணிகளில் ஏற்பட்டது.

தனியார்துறையிலுள்ள தொழில்நிலை மீதான தரவுகள் நன்கமைந்த தனியார்துறையின் குறிப்பிட்ட சில துணைப்பிரிவுகள் தொடர்பாக மட்டுமே கிடைக்கத்தக்கதாகவுள்ளன. 1986/87 இன் நுகர்வோர் நிதி, சமூகப் பொருளாதார அளவையின்படி நன்கமையாத தனியார்துறை மொத்தத் தொழில்நிலையில் ஏறத்தாழ 78 சதவீதத்திற்கு வகை கூறியது. நன்கமைந்த தனியார்துறையின் பங்கு ஏறத்தாழ 7 சதவீதமாகும். அரச, அரச கூட்டுத்தாபனங்கள் நியதிச் சபைகள், உள்நாட்டு அரச நிறுவனங்கள் ஆகியவற்றைக் கொண்டுள்ள அரசதுறை எஞ்சிய 15 சதவீதத்திற்கு வகை கூறியது. இதேவேளை கொழும்புப் பெரும்பாகப் பொருளாதார ஆணைக்குழுவிலுள்ள தொழில் முயற்சிகளிலுள்ள தொழில்நிலை மீளாய்வின் கீழுள்ள ஆண்டில் தொடர்ந்தும் அதிகரித்தது. 1988 இறுதியில் கொழும்பு பெரும்பாகப் பொருளாதார ஆணைக்குழுவில் தொழில்புரிவோர்களின் மொத்த எண்ணிக்கை 54,626 ஆக விளங்கி 7.7 சதவீத அதிகரிப்பைப் பதிவு செய்தது.

1988 இல் அரச தனியார்துறைகளின் தொழில்வாய்ப்புக்கள் மிகவும் மந்தமாக இருந்தமை கவனிக்கப்பட வேண்டியதாகும். இதற்கு முக்கிய காரணம் நாட்டில் தொடர்ச்சியான உள்நாட்டுக் குழப்பங்கள் மெதுவான பொருளாதார வளர்ச்சி என்பவற்றினல் உருவாக்கப்பட்ட தொடர்ச்சியான நிச்சயமற்ற தன்

Central Bank of Sri Lanka
22686
11 JUN 2009
LIBRARY & INFORMATION CENTRE
Communications Department



மையே ஆகும். தனியார்த்துறையில் புடவைகள், ஆடைகள் போன்ற மரபுவழியல்லா ஏற்றுமதிக் கைத்தொழில்கள் 1988 இல் தொழிலை ஈர்த்துக்கொள்ளும் முதன்மை மூலமாகத் தொடர்ந்தும் விளங்கின. இது அண்மைய ஆண்டுகளில் அவதானிக்கப்பட்டு வரும் ஒரு பண்பாகும்.

1988 இல் இலங்கையின் வெளிநாட்டு வர்த்தகத்துறையின் அபிவிருத்திகள் பாதகமாக விளங்கின. ஏற்றுமதிகளின் பெறுமதி 1987 இன் 4 சதவீத வளர்ச்சியுடன் ஒப்பிடுகையில் சிஎஉ நியதிகளில் 2 சதவீதத்தினால் சிறிதளவு மட்டுமே அதிகரித்தது. இதேவேளை 1987 இல் 4 சதவீதத்தால் வீழ்ச்சியடைந்த இறக்குமதிகள் மீதான செலவு 1988 இல் 5 சதவீதத்தால் உயர்வுற்றது. இதனால் வர்த்தகக் குறை முன்னைய ஆண்டின் 18 சதவீத வீழ்ச்சிக்கு அதிகளவு மாறாக இவ்வாண்டில் 12 சதவீதத்தால் அதிகரித்தது. மொத்த உள்நாட்டு உற்பத்தியின் விகிதமாக வர்த்தகக்குறை 1988 இல் 5 சதவீதத்திலிருந்து 6 சதவீதத்திற்கு உயர்வடைந்தது.

ஏற்றுமதி வருவாய்களில் காணப்பட்ட மெதுவான வளர்ச்சிக்கு முக்கியமாக தெங்கு, புடவைகளும், ஆடைகளும், பெற்றோலிய உற்பத்திகள் ஆகியவற்றிலிருந்தான வருவாய்களில் ஏற்பட்ட வீழ்ச்சிகள் காரணமாகும். தேயிலை, இறப்பர், சிறு வேளாண்மை உற்பத்திகள், இரத்தினக் கற்கள், மற்றும் கைத்தொழில் உற்பத்திகள் போன்றவற்றிலிருந்தான வருவாய்கள் அதிகரித்தபோதிலும் இவை ஏனைய துறைகளில் ஏற்பட்ட மந்த நிலையை ஈடுசெய்யப் போதுமானதாக இருக்கவில்லை. இறக்குமதிகள் மீதான உயர்ந்த செலவு முக்கிய இறக்குமதி விடயங்களின் விலைகள், அளவு ஆகிய இரண்டிலும் ஏற்பட்ட அதிகரிப்புக்களின் விளைவாகும். அரிசி, சீனி, கோதுமைத் தானியம், வளமாக்கி ஆகியவற்றின் இறக்குமதி விலைகள் 1987 இனைவிடக் குறிப்பிடத்தக்க அளவால் உயர்வடைந்த வேளையில் அரிசி, கோதுமைத் தானியம், வளமாக்கி ஆகியவற்றின் இறக்குமதி அளவுகள் கணிசமானளவு அதிகரிப்புக்களைப் பதிவு செய்தன.

திருத்தப்பட்ட சுங்கத் தரவுகளின்படி, ஏற்றுமதிகளிலிருந்தான மொத்த வருவாய்கள் 1987 இன் சிஎஉ 10,800 இலட்சத்துடன் (ரூ. 411,330 இலட்சம்) ஒப்பிடுகையில் 1988 இல் சிஎஉ 10,970 இலட்சமாக (ரூ. 469,280 இலட்சம்) விளங்கி சிஎஉ நியதிகளில் 1.6 சதவீத அதிகரிப்பைப் பதிவு செய்தன. 1988 இல் தனிப்பட்ட பண்ட வகைகள் வேறுபடும் ஏற்றுமதிச் செயலாற்றங்களைப் பதிவு செய்தன. 1988 இல் வேளாண்மை ஏற்றுமதிகள் 3 சதவீதமான மிதமான வளர்ச்சியைப் பதிவு செய்யும் வகையில் மீட்சியடைந்த வேளையில் கைத்தொழில் ஏற்றுமதிகள் 1 சதவீதமான சிறு அதிகரிப்பை மட்டும் பதிவு செய்தன. மாறாக 1987 இல் கைத்தொழில் ஏற்றுமதிகளின் வளர்ச்சி 9 சதவீதமாக விளங்கியது. 1988 இல் மிகவும் குறிப்பிடத்தக்க வளர்ச்சியாக 1987 இனைவிட 29 சதவீத அதிகரிப்பினைப் பதிவு செய்த கனிப்பொருள் ஏற்றுமதிகள் விளங்கின.

வேளாண்மை ஏற்றுமதிகளில் தேயிலை ஏற்றுமதிகளின் பெறுமதி 1987 இன் சிஎஉ 2,800 இலட்சத்திலிருந்து (ரூ. 106,540 இலட்சம்) 1988 இல் சிஎஉ 2,880 இலட்சத்திற்கு (ரூ. 122,990 இலட்சம்) 3 சதவீதத்தால் அதிகரித்தது. விலைகளில் ஏற்பட்ட 6 சதவீத வீழ்ச்சிக்கு (சிஎஉ நியதிகளில்) மாறாக வருவாயில் ஏற்பட்ட அதிகரிப்புக்கு ஏற்றுமதி அளவு ரூ. 2,200 இலட்சம் கிலோக்கிராம்களாக 9 சதவீதத்திற்கு உயர்வடைந்தமையே முற்றிலும் காரணமாகும். இதேவேளை இறப்பர் ஏற்றுமதிகளின் பெறுமதி 1987 இன் சிஎஉ 770 இலட்சத்திலிருந்து (ரூ. 29,290 இலட்சம்) 1988 இல் சிஎஉ 870 இலட்சத்திற்கு (ரூ. 37,060

இலட்சம்) 13 சதவீதத்தினுல் அதிகரித்தமைக்கு ஏற்றுமதி விலையில் ஏற்பட்ட 19 சதவீத உயர்வே காரணமாகும். 1987 இல் 4 சதவீதத்தால் வீழ்ச்சியடைந்த இறப்பர் ஏற்றுமதி அளவு 1988 இல் மேலும் 6 சதவீதத்தால் 990 இலட்சம் கிலோகிரும்களுக்கு வீழ்ச்சியடைந்தது தெங்கு ஏற்றுமதிகளிலிருந்தான வருவாய்கள் 1987 இன் சிஎஉ 560 இலட்சத்திலிருந்து (ரூ. 21,400 இலட்சம்) 1988 இல் சிஎஉ 360 இலட்சத்திற்கு (ரூ. 15,380 இலட்சம்) 36 சதவீதத்தினுல் கணிசமாக வீழ்ச்சியுற்றமைக்குக் குறைவான உற்பத்தியின் விளைவாக ஏற்றுமதி அளவில் ஏற்பட்ட கணிசமான வீழ்ச்சி காரணமாகும். இதேவேளை சிஎஉ நியதிகளில் 33 சதவீதத்தால் சிஎஉ 600 இலட்சத்திற்கு (ரூ. 25,610 இலட்சம்) உயர்வடைந்த சிறு வேளாண்மை ஏற்றுமதிகளின் பெறுமதியில் அதிகளவு முன்னேற்றம் காணப்பட்டது. ஒப்பிடுகையில் கைத்தொழில் ஏற்றுமதிகளின் பெறுமதி 1987 இன் சிஎஉ 5,250 இலட்சத்திலிருந்து 1988 இல் சிஎஉ 5,300 இலட்சத்திற்கு ஒரு சதவீதமான சிறு அதிகரிப்பை மட்டுமே பதிவு செய்தது. இது முன்னைய ஆண்டில் காணப்பட்ட 9 சதவீத வளர்ச்சிக்கு அதிகளவு மாறுனதாகும். முன்னர் கூறப்பட்டதுபோலக் கனிப்பொருள் ஏற்றுமதிகள் 1987 இன் குறைந்த மட்டமான சிஎஉ 470 இலட்சத்திலிருந்து (ரூ. 18,050 இலட்சம்) 1988 இல் சிஎஉ 610 இலட்சத்திற்கு (ரூ. 26,140 இலட்சம்) 29 சதவீதங் கொண்ட குறிப்பிடத்தக்க வளர்ச்சியைப் பதிவு செய்தன. இதில் இரத்தினக்கல் ஏற்றுமதிகள் மிகப் பெரும் தொகையாக அமைந்து அதன் பெறுமதி சிஎஉ 380 இலட்சத்திலிருந்து (ரூ. 14,470 இலட்சம்) சிஎஉ 480 இலட்சத்திற்கு (ரூ. 20,700 இலட்சம்) உயர்வடைந்தது.

ஏற்றுமதி வருவாய்களின் மெதுவான வளர்ச்சிச் சூழலில் ஏற்றுமதி அமைப்பு 1988 இல் சிறு மாற்றங்களுக்குட்பட்டிருந்தது. கைத்தொழில் ஏற்றுமதிகள் ஏற்றுமதிகளில் முக்கிய வகையாக 1986 இல் அடைந்த நிலையில் தொடர்ந்தும் விளங்கி மொத்த ஏற்றுமதிகளில் 48 சதவீதத்திற்கு வகை கூறின. எனினும் புடவைகள் ஆடைகளினது ஏற்றுமதிகள் 1987 இன் மொத்த ஏற்றுமதிகளில் 31 சதவீதத்திலிருந்து 1988 இல் 30 சதவீதத்திற்குக் குறைவடைந்து சிறிதளவு வீழ்ச்சியைப் பதிவு செய்தன. இவ்வீழ்ச்சிக்கு மத்தியிலும் புடவைகள் ஆடைகள் வகை தொடர்ந்தும் தனிப்பெரும் ஏற்றுமதி விடயமாக விளங்கியது. இதே வேளையில் 1987 இல் மொத்த ஏற்றுமதிகளில் 38 சதவீதத்திற்கு வகைகூறிய பெருந்தோட்டப் பயிர்களான தேயிலை, இறப்பர், தெங்கு ஆகியவற்றின் பங்கு 1988 இல் 37 சதவீதத்திற்கு வீழ்ச்சியடைந்தது. மறுபுறத்தில் கனிப் பொருள் ஏற்றுமதிகளின் பங்கு இவ்விரு ஆண்டுகளுக்கிடையில் 4 சதவீதத்திலிருந்து6 சதவீதமாக அதிகரித்தது.

சீராக்கப்பட்ட சுங்கத் தரவுகளின்படி, இறக்குமதிகள் மீதான மொத்தச் செலவுகள் 1987 இன் சிஎஉ 15,890 இலட்சத்துடன் (ரூ. 605,280 இலட்சம்) ஒப்பிடுகையில் 1988 இல் சிஎஉ 16,650 இலட்சமாக (ரூ. 712,000 இலட்சம்) விளங்கி சிஎஉ நியதிகளில் 5 சதவீத அதிகரிப்பையும் ரூபா நியதிகளில் 18 சதவீத அதிகரிப்பையும் பதிவு செய்தன. இவ்வதிகரிப்பு முக்கியமாக நுகர்வோர் பண்டங்களிலும் இடைநிலைப் பண்டங்களிலும் பிரதிபலித்தது. நுகர்வுப் பண்டங்களின் இறக்குமதிகள் மீதான செலவு சிஎஉ நியதிகளில் 3 சதவீதத்தால் வீழ்ச்சியடைந்த முன்னைய ஆண்டின் அனுபவத்திற்கு முற்றிலும் மாறுக, அத்தகைய செலவுகள் 1987 இன் சிஎஉ 3,630 இலட்சத்திலிருந்து (ரூ. 138,140 இலட்சம்) 1988 இல் சிஎஉ 4,080 இலட்சத்திற்கு (ரூ. 174,250 இலட்சம்) 12 சதவீதத்தால் உயர்வுற்றன. இவ்வதிகரிப்பு எல்லா வகை நுகர்வுப் பண்டங்களின் இறக்குமதிகளிலும் பிரதிபலித்தது. அரிசி இறக்குமதிகளின் மீதான செலவு 1987 இன்

சிஎஉ 180 இலட்சத்திலிருந்து (ரூ. 6,870 இலட்சம்) 1988 இல் சிஎஉ 420 இலட்சத்திற்கு (ரூ. 17,950 இலட்சம்) இரு மடங்கிற்கும் கூடுதலாக அதிகரித்தது. இது அளவு 86 சதவீதத்தால் 210,000 மெற்றிக் தொன்களுக்கு அதிகரித்தமையினதும் விலையில் ஏற்பட்ட 25 சதவீத அதிகரிப்பினதும் கூட்டு விளைவாகும். சீனியின் விலையில் ஏற்பட்ட 29 சதவீதமான அதிகளவு உயர்வு, இறக்குமதி அளவு 15 சதவீதத்தால் வீழ்ச்சியடைந்தபோதிலும் சீனி இறக்குமதிகளின் பெறுமதியை சிஎஉ 690 இலட்சத்திற்கு (ரூ. 29,270 இலட்சம்) 9 சதவீதத்தால் உயர்வடையச் செய்தது. பால், பால் உற்பத்திகளின் இறக்குமதிப் பெறுமதியும் 1987 இன் சிஎஉ 330 இலட்சத்திலிருந்து 1988 இல் சிஎஉ 450 இலட்சமாக 35 சதவீதத்தால் அதிகளவு அதிகரித்தது.

இடைநிலைப் பண்டங்களின் இறக்குமதிச் செலவு 1987 இன் சிஎஉ 9,090 இலட்சத்துடன் (ரூ. 346,190 இலட்சம்) ஒப்பிடுகையில் 1988 இல் சிஎஉ 9,470 இலட்சமாக (ரூ. 405,080 இலட்சம்) விளங்கி சிஎஉ நியதிகளில் 4 சதவீத அதிகரிப்பைப் பதிவு செய்தது. இவ்வதிகரிப்பு பெரும்பாலும் வளமாக்கி, கோதுமைத் தானியம், இரசாயனங்கள் போன்ற முக்கிய இறக்குமதி வகைகளின் அளவு, விலைகள் ஆகிய இரண்டிலும் காணப்பட்ட அதிகரிப்புக்களின் விளைவாகும். வளமாக்கி இறக்குமதிகள் மீதான செலவு அதன் அளவு 373,000 மெற்றிக் தொன்களிலிருந்து 556,000 மெற்றிக் தொன்களுக்குக் கணிசமாக அதிகரித்தமையினதும் விலையில் ஏற்பட்ட 14 சதவீத அதிகரிப்பினதும் காரணமாக சிஎஉ 580 இலட்சத்திற்கு (ரூ. 24,760 இலட்சம்) 70 சதவீதத்தால் அதிகளவால் அதிகரித்தது. மேலும் அளவில் ஏற்பட்ட 6 சதவீத அதிகரிப்பினதும் விலையில் ஏற்பட்ட 30 சதவீத அதிகரிப்பினதும் காரணமாகக் கோதுமைத் தானிய இறக்குமதிகள் மீதான செலவு 1987 இன் சிஎஉ 510 இலட்சத்திலிருந்து (ரூ. 19,230 இலட்சம்) 1988 இல் சிஎஉ 700 இலட்சத்திற்கு (ரூ. 29,830 இலட்சம்) 38 சதவீதத்தால் உயர்வடைந்தது. இதேவேளை இரசாயன உற்பத்திகளின் இறக்குமதிகள் மீதான செலவு இவ்விரு ஆண்டுகளுக்குமிடையில் சிஎஉ 410 இலட்சத்திலிருந்து (ரூ. 15,590 இலட்சம்) சிஎஉ 440 இலட்சத்திற்கு (ரூ. 18,870 இலட்சம்) அதிகரித்தது. இவ்வதிகரிப்புக்கு மத்தியிலும் பீப்பாய் ஒன்றிற்கான விலை சிஎஉ 14 இலிருந்து சிஎஉ 11 இற்கு 21 சதவீதத்தால் வீழ்ச்சியுற்றமையின் முழுமையான காரணமாக பெற்றோலிய இறக்குமதிகள் மீதான செலவு 20 சதவீதத்தால் வீழ்ச்சியுற்றமையினால் இடைநிலைப் பண்டங்களின் இறக்குமதிகளின் பெறுமதியிலேற்பட்ட வளர்ச்சி ஓரளவுக்குத் தணிக்கப்பட்டது.

நுகர்வு, இடைநிலைப் பண்டங்களின் இறக்குமதிகளுக்கு மாறாக முதலீட்டுப் பண்டங்கள் மீதான செலவு 1987 இன் சிஎஉ 2,970 இலட்சத்திலிருந்து (ரூ. 113,340 இலட்சம்) 1988 இல் சிஎஉ 2,830 இலட்சத்திற்கு (ரூ. 120,810 இலட்சம்) 5 சதவீதத்தால் வீழ்ச்சியுற்றது. இது அதிகரித்து வரும் நிச்சயமற்ற தன்மையின் சூழலில் முதலீட்டு நடவடிக்கைகள் குறைவடைவதன் பிரதிபலிப்பாகும். போக்குவரத்துக் கருவிகளின் இறக்குமதிகளின் பெறுமதி சிஎஉ 370 இலட்சத்திலிருந்து சிஎஉ 330 இலட்சத்திற்கு அல்லது 12 சதவீதத்தால் வீழ்ச்சியுற்றவேளையில் பொறித்தொகுதிகளினது இறக்குமதிப் பெறுமதி சிஎஉ 1,740 இலட்சத்திலிருந்து சிஎஉ 1,650 இலட்சத்திற்கு அல்லது 5 சதவீதத்தால் வீழ்ச்சியடைந்தது.

வர்த்தக, நடைமுறைக் கணக்குகள் இரண்டினதும் நிலுவைகளின் நியதிகளின்படி இலங்கையின் சென்மதி நிலுவை 1988 இல் கணிசமானளவிற்கு மோசமடைந்தது. வணிகக் கணக்குகளின் குறை 1987 இன் சிஎஉ 5,250 இலட்சத்திலிருந்து (ரூ. 200,050 இலட்சம்) 1988 இல் சிஎஉ 5,740 இலட்சத்திற்கு (ரூ. 245,120 இலட்சம்) 9 சதவீதத்தால் அதிகரித்தது. இதே வழியினைத் தொடர்ந்து நடைமுறைக் கணக்குக் குறை முன்னைய ஆண்டின் சிஎஉ 2,650 இலட்சத்திலிருந்து (ரூ. 100,930 இலட்சம்) 1988 இல் சிஎஉ 3,240 இலட்சத்திற்கு (ரூ. 138,410 இலட்சம்) 22 சதவீதத்தால் விரிவடைந்தது. இதனால் மொத்த உள்நாட்டு உற்பத்திக்கான நடைமுறைக் கணக்குக் குறையின் விகிதம் 1987 இன் 5.1 சதவீதத்திலிருந்து 1988 இல் 6.2 சதவீதத்திற்கு அதிகரித்து சென்மதி நிலுவை மீது அதிகரித்த தாக்கத்தைப் பிரதிபலித்தது. இதே வேளை நடைமுறைக் கணக்குக் குறையினை நிதியிடப் பயன்படுத்தப்படும் தேறிய நாணய மூலதனப் பாய்ச்சல் 1988 இல் 11 சதவீதத்தால் வீழ்ச்சியுற்று சிஎஉ 1,010 இலட்சங் கொண்ட கூடியளவு மொத்தக் குறையினை ஏற்படுத்தியது. இது நாட்டின் வெளிநாட்டுச் சொத்துக்களை எடுப்பனவு செய்வதன் மூலமாக ஈடு செய்யப்பட வேண்டியிருந்தது. மொத்த நிலுவை குறையினைக் கொண்டிருந்தமை இது நாலாவது தொடர்ச்சியான ஆண்டாவதுடன் இறுதி நாலு ஆண்டுகளினதும் மொத்த ஒன்று சேர்ந்தகுறை சிஎஉ 3,580 இலட்சமளவில் காணப்பட்டது.

பணிகள் தொடர்பான தேறிய வெளிக் கொடுப்பனவுகள் 1987 இன் சிஎஉ 1.200 இலட்சத்திலிருந்து (ரூ. 46,250 இலட்சம்) 1988 இல் சிஎஉ 1,260 இலட்சத்திற்கு (ரூ. 54,030 இலட்சம்) உயர்வடைந்தன. இது பெருமளவிற்கு வட்டிக் கொடுப்பனவுகள் தொடர்பாக அதிகரித்த வெளிப்பாய்ச்சல்களினதும் சுற்றுலாவிலிருந்தான வருவாய்களில் ஏற்பட்ட வீழ்ச்சியினதும் விளைவாகும். பன்னாட்டு நாணய நிதியத்திற்கான கடப்பாடு உட்பட வெளிநாட்டுப் படுகடன் மீதான வட்டிக் கொடுப்பனவுகளும் ஏனைய கட்டணங்களும் 1987 இன் சிஎஉ 1,500 இலட்சத்திலிருந்து (ரூ. 57,210 இலட்சம்) 1988 இல் சிஎஉ 1,650 இலட்சத்திற்கு (ரூ. 70,520 இலட்சம்) அதிகரித்தன. வட்டிக் கொடுப்பனவுகளில் ஏற்பட்ட அதிகரிப்பு வெளிநாட்டுப் படுகடனில் ஏற்பட்ட உயர்வினதும் உயர்வான பன்னாட்டு வட்டி வீதங்களினதும் விளைவாக ஏற்பட்டதாகும். இதேவேளை 1983 இன் உள்நாட்டுக் குழப்பங்களுடன் தொடங்கிய சுற்றுலாப் பெறுகைகளில் ஏற்பட்ட கீழ்நோக்கிய போக்கு 1988 இலும் தொடர்ந்து காணப்பட்டது. சுற்றுலாவிலிருந்தான மொத்த வருவாய் 1987 இன் சிஎஉ 550 இலட்சத்திலிருந்து (ரூ. 21.070 இலட்சம்) 1988 இல் சிஎஉ 460 இலட்சத்திற்கு (ரூ. 19,640 இலட்சம்) அல்லது 16 சதவீதத்தால் வீழ்ச்சியடைந்தது.

முன்னைய ஆண்டினைப் போலவே பணிகள் கணக்கிலுள்ள துறைமுகம், போக்குவரத்து, காப்புறுதி வகை 1988 இல் சாதகமான அபிவிருத்தியைக் காட்டியது. இவ் வகையிலுள்ள மிகை 1987 இன் சிஎஉ 20 இலட்சத்திலிருந்து (ரூ. 650 இலட்சம்) 1988 இல் சிஎஉ 60 இலட்சத்திற்கு (ரூ. 2,190 இலட்சம்) உயர்வடைந்தது. இப்பெரும் மிகைக்குத் துறைமுகப் பணிகளிலிருந்தும் எயர் லங்காப் பணிகள் கட்டணங்களிலிருந்தும் கிடைத்த அதிகரித்த பெறுகைகளும், எயர் லங்காவின் வெளிநாட்டுக் கொடுப்பனவுகளில் ஏற்பட்ட குறையும் காரணங்களாகும்.

පුස්තකාලය
මොරටුව විශ්ව විද්‍යාලය, ශ්‍රී ලංකාව
මොරටුව.



அண்மை ஆண்டுகளில் வெளிநாடுகளில் தொழில் புரியும் இலங்கையர்களின் பண அனுப்பல்கள் மூலமான வெளிநாட்டுச் செலாவணிப் பெறுகைகள் இலங்கையின் சென்மதி நிலுவைக்கு உதவும் முக்கிய மூலமாக இருந்தன. எனினும் 1984 இல் உச்சத்தை அடைந்த பின்னர் இப்பண அனுப்பல்கள் உண்மை நியதிகளில் தொடர்ந்து உறுதியாக வீழ்ச்சியடைந்துள்ளன. தனியார் மாற்றல்களிலிருந்தான மொத்தப் பெறுகைகள் 1987 இன் சிஎஉ 2,700 இலட்சத்துடன் ஒப்பிடுகையில் 1988 இல் சிஎஉ 2,620 இலட்சமாக விளங்கியது. எனினும் ரூபா நியதிகளில் இப்பணவனுப்பல்கள் 1987 இன் ரூ. 103,240 இலட்சத்திலிருந்து 1988 இல் ரூ. 111,940 இலட்சத்திற்கு 8 சதவீதத்தால் அதிகரித்தன. 1988 இல் செயற்றிட்ட, பண்டக் கொடைகளை உள்ளடக்கிய அலுவல்சார் மாற்றல்கள் சிஎஉ 1,390 இலட்சத்திலிருந்து (ரூ. 53,110 இலட்சம்) சிஎஉ 1,420 இலட்சத்திற்கு (ரூ. 60,770 இலட்சம்) சிறிதளவால் உயர்வடைந்தன. எனவே தனியார், அலுவல்சார் மூலங்களிலிருந்தான இணைந்த மாற்றல் பெறுகைகளை ஒன்றாக நோக்குமிடத்து சிஎஉ நியதிகளில் இது வீழ்ச்சியைப் பதிவு செய்தது. 1988 இல் தேறிய மாற்றல் கொடுப்பனவுகள் பொருட்கள், பணிகள் மீதான குறையில் 54 சதவீதத்தை மட்டும் ஈடுசெய்யப் போதுமானதாக இருந்தன. இது 1987 இன் 59 சதவீதத்துடன் ஒப்பிடத்தக்கதாக இருந்ததுடன் சிஎஉ 3,240 இலட்சம் (ரூ. 138,410 இலட்சம்) கொண்ட அதிகளவு நடைமுறைக் கணக்குக் குறையினை மூலதனப் பாய்ச்சல்கள் மூலமாக நிதியிடவேண்டியுமேற்பட்டது. 1987 இல் நடைமுறைக் கணக்குக் குறை சிஎஉ 2,640 இலட்சமாக இருந்தது. எனவே முன்னேற்றமான செயலாற்றத்தினைக் கொண்டிருந்த இரண்டு ஆண்டுகளின் பின்னர் 1988 இல் நடைமுறைக் கணக்கு நிலுவை மோசமான நிலைக்கு மாறியது.

உள்நாட்டு முதலீடுகளுக்கும் உள்நாட்டுச் சேமிப்புக்களுக்கும் இடையேயான வேறுபாடு என வரைவிலக்கணப்படுத்தப்பட்ட நடைமுறைக் கணக்குக் குறை வழமையாகத் தனியார் வெளிநாட்டு முதலீடுகளினதும் அலுவல்சார் மூலதனத்தினதும் வடிவிலான மூலதனப் பாய்ச்சல்கள் மூலம் நிதியிடப்படுவதற்கு எதிர்பார்க்கப்படுகிறது. எனினும் 1987 இல் வீழ்ச்சியடைந்த இம்மூலதனப் பாய்ச்சல்கள் 1987 இன் சிஎஉ 2,180 இலட்சத்திலிருந்து (ரூ. 84,080 இலட்சம்) 1988 இல் சிஎஉ 1,930 இலட்சத்திற்கு (ரூ. 82,310 இலட்சம்) 11 சதவீதத்தால் வீழ்ச்சியடைந்து 1988 இல் மேலுமொரு பின்னடைவினைக் காட்டின. முக்கியமாக இவ் வீழ்ச்சி தனியார்துறைக்கான தேறிய மூலதனப் பாய்ச்சல்களில் ஏற்பட்ட அதிகளவு வீழ்ச்சியினாலும் அலுவல்சார் கடன்கள் மீதான அதிகரித்த கடன் தீர்ப்பனவுக் கொடுப்பனவுகளினாலும் ஏற்பட்டதாகும். நீண்டகால அலுவல்சார் கடன்களின் கீழான பகிர்ந்தளிப்புக்கள் 1987 இன் சிஎஉ 2,650 இலட்சத்திலிருந்து (ரூ. 101,620 இலட்சம்) 1988 இல் சிஎஉ 2,860 இலட்சத்திற்கு (ரூ. 122,430 இலட்சம்) அதிகரித்தது. எனினும் சிஎஉ 1,220 இலட்சமாக (ரூ. 52,340 இலட்சம்) விளங்கிய இக்கடன்கள் மீதான அதிகரித்த கடன் தீர்ப்பனவுக் கொடுப்பனவுகளின் விளைவாக அலுவல்சார் மூலதனப் பாய்ச்சல்களின் வடிவில் கிடைக்கத்தக்க தேறிய மூலவளங்கள் இவ்வாண்டில் சிஎஉ 1,640 இலட்சத்திற்கு (ரூ. 70,090 இலட்சம்) குறைக்கப்பட்டது. இதேவேளை தனியார் மூலதனத்தின் தேறிய உட்பாய்ச்சல்கள் 1987 இன் சிஎஉ 650 இலட்சத்திலிருந்து 1988 இல் சிஎஉ 290 இலட்சத்திற்கு அதிகளவில் வீழ்ச்சியடைந்தன.

மொத்தத்தில், அலுவல்சார் தனியார் ஆகிய இரண்டினதும் தேறிய மூலதனப் பாய்ச்சல்கள் 1988 இன் விரிவாக்கப்பட்ட நடைமுறைக் கணக்குக் குறையின் 60 சதவீதத்தை மட்டுமே நிதியிடப் போதுமானதாக விளங்கியதுடன் இதனால் வெளிநாட்டு ஒதுக்குகளின் மீதான எடுப்பனவுகளின் மூலம் பெருமளவு

53773

மொத்தக் குறையினை நிதியிடவேண்டியிருந்தது. மொத்த வெளிநாட்டுச் சொத்துக்கள் 1988 இல் சிஎஉ 220 இலட்சத்தால் அல்லது 5 சதவீதத்தால் வீழ்ச்சியடைந்ததுடன் சென்மதி நிலுவைக் குறையினை நிதியிடுவதற்கு நாட்டின் வெளிநாட்டுச் சொத்துக்கள் பயன்படுத்தப்பட்டமை இது நாலாவது தொடர்ச்சியான ஆண்டாகும். மொத்த வெளிநாட்டுச் சொத்துக்கள் 1987 இறுதியின் சிஎஉ 4,150 இலட்சத்துடன் (ரூ. 181,340 இலட்சம்) ஒப்பிடுகையில் 1988 திசெம்பர் இறுதியில் சிஎஉ 3,930 இலட்சமாக (ரூ. 174,820 இலட்சம்) விளங்கின. 1988 இறுதியின் மொத்த வெளிநாட்டுச் சொத்துக்களின் மட்டம் 1989 இற்கென திட்டமிடப்பட்ட இறக்குமதிகளில் ஏறத்தாழ $2\frac{1}{2}$ மாதங்களின் இறக்குமதிகளை மட்டும் நிதியிடப்போதுமானதாக விளங்கியது. இது 1987 இறுதியில் கிடைக்கத்தக்கதாக இருந்த 3 மாத இறக்குமதிகளுடன் ஒப்பிடத்தக்கதாகும்.

1985 இலிருந்து ஐ.அ. டொலருக்கு எதிராகப் பெரும்பாலான பன்னாட்டு நாணயங்களின் பெறுமதி உயர்வடைந்தமையின் காரணமாக எல்லா முதன்மை நாணயங்களுக்கெதிராகவும் இலங்கை ரூபா பெயரளவு நியதிகளில் பெறுமதியில் தேய்வடைந்து வருகிறது. எனினும் 1988 இல் செலாவணி வீத அசைவுகள் கலந்து காணப்பட்டன. இவ்வாண்டில் இலங்கை ரூபா பல நாணயங்களுக்கெதிராகப் பெறுமதியில் உயர்வடைந்தது. இந்திய ரூபாவுக்கு எதிராக 10 சதவீதத்தாலும், டியூச் மார்க்கிற்கெதிராக 4.3 சதவீதத்தாலும், பிரான்சு பிராங்கிற்கு எதிராக 5.2 சதவீதத்தாலும் உயர்வடைந்தது. எனினும் இது பெயரளவு நியதியில் ஏனைய பல நாணயங்களுக்கெதிராகத் தொடர்ந்து வீழ்ச்சியுற்றது. பவுண் ஸ்ரேலிங்கிற்கு எதிராக 3.2 சதவீதத்தாலும், யப்பானிய யென்னுக்கெதிராக 5.3 சதவீதத்தாலும் தேய்வுற்றது. ஐ.அ. டொலருக்கெதிராக ரூபா 6.9 சதவீதத்தால் தேய்வுற்றவேளையில் சிஎஉ க்கெதிராகக் குறைவான வீதமான 2.3 சதவீதத்தால் தேய்வுற்று 1988 இல் சிஎஉ வுக்கெதிராக ஐ.அ. டொலர் வலுப்பெறுதலைப் பிரதிபலித்தது. முதன்மை வர்த்தகப் பங்காளர்கள் தொடர்பான வர்த்தக நிறையேற்றப்பட்ட பெயரளவு செலாவணி வீதம் என வரையறுக்கப்பட்ட இலங்கை ரூபாவின் பெயரளவு தாக்கமுள்ள செலாவணி வீதம் 1988 இல் 5.1 சதவீதத்தால் வீழ்ச்சியுற்றது. மறுபுறத்தில் உண்மையான தாக்கமுள்ள செலாவணி வீதம் அதாவது இலங்கைக்கும் அதன் முதன்மை வர்த்தகப் பங்காளர்களுக்குமிடையேயான பணவீக்க வேறுபாடுகளுக்குச் சீராக்கம் செய்யப்பட்ட பெயரளவிலான தாக்கமுள்ள செலாவணி வீதம் புள்ளிக்குப் புள்ளி அடிப்படையில் 5.3 சதவீதத்தால் உயர்வடைந்தது.

வெளிநாட்டுப் படுகடனின் வேகமான திரட்சி அண்மைய ஆண்டுகளில் கவலைக்குரியதொரு விடயமாக விளங்குகிறது. குறுகிய காலக் கடன்கள், வர்த்தகக் கொடுகடன்கள், மத்திய வங்கிக் கடன்பாடுகள் என்பனவற்றை உள்ளடக்கிய இலங்கையின் வெளிநாட்டுப் படுகடனின் வெளிநின்ற மொத்தத் தொகை 1987 இறுதியின் சிஎஉ 33,720 இலட்சத்திலிருந்து (ரூ. 1,448,890 இலட்சம்) 1988 இறுதியில் சிஎஉ 36,790 இலட்சத்திற்கு (ரூ. 1,625,480 இலட்சம்) உயர்வடைந்தது. எனவே இவ்வாண்டில் வெளிநாட்டுப் படுகடன் சிஎஉ நியதிகளில் 9 சதவீதத்தாலும் ரூபா நியதிகளில் 12 சதவீதத்தாலும் உயர்வடைந்தது. முன்னைய ஆண்டில், சிஎஉ நியதியில் வெளிநாட்டுப் படுகடன் சிறிதளவால் வீழ்ச்சியுற்றவேளையில் ரூபா நியதியில் இது 24 சதவீதத்தால் அதிகரித்தது. மொத்த உள்நாட்டு உற்பத்தியிலும் பார்க்க வெளிநாட்டுப் படுகடனில் ஏற்பட்ட உயர்வான அதிகரிப்பு வீதத்தைப் பிரதிபலிக்கும் வகையில் மொ.உ.உ. இற்கு வெளிநாட்டுப் படுகடனின் விகிதம் 1987 இன் 65 சதவீதத்திலிருந்து 1988 இல் 70 சதவீதத்திற்கு அதிகரித்தது.

இவ்வாண்டில் வெளிநாட்டுப் படுகடன் அதிகரித்தபோதிலும் 1987 இன் சிஎஉ 1,920 இலட்சத்திலிருந்து (ரூ. 83,480 இலட்சம்) 1988 இல் சிஎஉ 1,700 இலட்சத்திற்கு (ரூ. 75,560 இலட்சம்) 11 சதவீதத்தால் வீழ்ச்சியுற்ற குறுகிய காலப் படுகடனில் காணப்பட்ட வீழ்ச்சி வரவேற்கத்தக்கதொரு அபிவிருத்தியாகும். இது முக்கியமாக மத்திய வங்கியின் வெளிநாட்டுக் கடன்பாடுகள் சிஎஉ 410 இலட்சத்திலிருந்து சிஎஉ 50 இலட்சத்திற்கு வீழ்ச்சியுற்றமையினுல் ஏற்பட்டதாகும். இதேவேளையில் தனியார்துறையின் நடுத்தர நீண்ட காலப் படுகடனின் வெளிநிற்கும் மட்டம் இவ்வாண்டில் சிஎஉ 260 இலட்சத்தால் அதிகரித்தது. இம்மாற்றங்களுடன் 1988 இல் இலங்கையின் வெளிநாட்டுப் படுகடன் அமைப்பில் குறிப்பிடத்தக்க முன்னேற்றமொன்று காணப்பட்டது. வர்த்தக கடன்பாடுகளை ஊக்கமிழக்கச் செய்யும் மதிநுட்பம் வாய்ந்த கொள்கையின் காரணமாக மொத்தப் படுகடனில் வர்த்தகக் கடன்பாடுகளின் பங்கு 1987 இற்கும், 1988 இற்கும் இடையில் 21 சதவீதத்திலிருந்து 19 சதவீதத்திற்கு வீழ்ச்சியுற்றது.

நடுத்தர நீண்ட காலக் கடன்கள் மீதான கடன் தீர்ப்பனவுக் கொடுப்பனவுகளையும் எல்லா வெளிநாட்டுக் கடன்கள் மீதான வட்டிக் கொடுப்பனவுகளையும் உள்ளடக்கும் மொத்தப் பணிக் கொடுப்பனவுகள் 1987 இன் சிஎஉ 3,830 இலட்சத்திலிருந்து (ரூ. 145,380 இலட்சம்) 1988 இல் சிஎஉ 3,990 இலட்சத்துக்கு (ரூ. 170,180 இலட்சம்) அதிகரித்தன. இது சிஎஉ நியதிகளில் 4 சதவீத அதிகரிப்பையும் ரூபா நியதியில் 17 சதவீத அதிகரிப்பையும் பிரதிபலித்தது. 1988 இல் பணிக் கொடுப்பனவுகளில் ஏற்பட்ட அதிகரிப்புக்கு வட்டிக் கொடுப்பனவுகளில் ஏற்பட்ட அதிகளவு அதிகரிப்பே முற்றிலும் காரணமாகும். மொத்தத்தில் வட்டிக் கொடுப்பனவுகள் சிஎஉ 1,300 இலட்சத்திலிருந்து (ரூ. 49,160 இலட்சம்) சிஎஉ 1,490 இலட்சத்திற்கு (ரூ. 63,630 இலட்சம்) அல்லது 14 சதவீதத்தால் அதிகரித்தமைக்கு வெளிநாட்டுச் சந்தைகளில் வட்டி வீதங்களில் ஏற்பட்ட அதிகளவு உயர்வுகள் பெருமளவுக்குக் காரணமாகும். மொத்தப் படுகடன் பணிக் கொடுப்பனவுகளில் வட்டிக் கொடுப்பனவுகள் 1987 இன் 34 சதவீதத்துடன் ஒப்பிடுகையில் 1988 இல் 37 சதவீதத்திற்கு வகை கூறின. மாருக கடன் தீர்ப்பனவுக் கொடுப்பனவுகள் சிஎஉ 2,540 இலட்சத்திலிருந்து சிஎஉ 2,510 இலட்சத்துக்கு வீழ்ச்சியுற்றன. வட்டிக் கொடுப்பனவுகளின் அதிகரிப்பைப் பிரதிபலிக்கும் வகையில் படுகடன் பணி விகிதம் அதாவது பொருட்களினதும் பணிகளினதும் ஏற்றுமதிகளின் விகிதமாக மொத்தப் படுகடன் பணிக் கொடுப்பனவுகள் 1987 இன் 27.7 சதவீதத்திலிருந்து 1988 இல் 28.8 சதவீதத்திற்கு உயர்வடைந்தன. மொத்தப் படுகடன் பணி விகிதமும் அதாவது அலுவல்சார் மாற்றல்கள் நீங்கலான நடைமுறைக் கணக்கு பெறுகைகளின் விகிதமாக மொத்தப் பணிக் கொடுப்பனவுகள் இவ்விரு ஆண்டுகளுக்கிடையிலும் 23.2 சதவீதத்திலிருந்து 24.2 சதவீதத்திற்கு உயர்வடைந்தன. படுகடன் பணி விகிதத்தின் உயர்வு, அதிகளவு படுகடன் பணிக் கொடுப்பனவுகளினதும், ஏற்றுமதிகளிலும் ஏனைய பெறுகைகளிலும் காணப்பட்ட மந்தமான வளர்ச்சியினதும் விளைவாகும்.

1988 இல் சென்மதி நிலுவையில் காணப்பட்ட பாதகமான அபிவிருத்திகள் பல காரணிகளின் விளைவாக ஏற்பட்டதாகும். முதலாவது தொடர்ந்துவரும் உள்நாட்டுக் குழப்பங்கள் ஏற்றுமதித்துறை அதன் முழு ஆற்றலையும் பெறுவதிலிருந்தும் தடை செய்தது. இரண்டாவது அரிசி, கோதுமைத் தானியம், சீனி போன்ற இலங்கை இறக்குமதி செய்யும் அடிப்படை உணவு விடயங்களினதும் வளமாக்கி போன்ற சில இடைநிலைப் பொருட்களினதும் விலைகள் பன்னாட்டுச் சந்தைகளில் கணிசமான அதிகரிப்புக்களைப் பதிவு செய்தன. மூன்ருவது சென்மதி

நிலுவைச் செயலாற்றத்தை முன்னேற்றுவதற்கு நாடப்பட்ட பேரண்ட பொரு ளாதார சீராக்கக் கொள்கைகளின் நடைமுறைப்படுத்தல் நாட்டில் நிலவிய அமைதியற்ற நிலைமைகளினால் மூலவளங்கள் மீது ஏற்பட்ட அதிகளவு கேள்விகளின் காரணமாகத் தடைப்பட்டது. மேலும் இந்நிச்சயமற்ற நிலைமை தனியார், அலுவல்சார் ஆகிய இரண்டிலும் எதிர்பார்க்கப்பட்ட மூலதனப் பாய்ச்சல்களை முழுமையாகப் பெற்றுக் கொள்வதிலிருந்தும் தடுத்தது. இப்பாதிப்புக்களின் தாக்கத்தின் கீழ் சென்மதி நிலுவை அதிகளவு பாதிப்படைந்ததுடன் வெளி நாட்டுச் சொத்துக்களின் நிலைமையும் ஆபத்தான மட்டத்திற்கு அதாவது 1982 இற்குப் பின்னர் ஆகக்குறைந்த மட்டத்திற்குப் பலவீனப்பட்டது.

### அட்டவணை 1.3

### சென்மதி நிலுவையின் தொகுப்பு 1985—1988

பத்து இலட்சம் ரூபாய்களில் (சி. எ. உ. பத்து இலட்சம் அடைப்புக்குறிக்குள்)

| விடயங்கள் | 1985 | 1986 | 1987(அ) | 1988 (ஆ) |
|---|---|---|---|---|
| வணிகப் பொருட்கள் (தேறிய) ... | —19,801 (—711) | —21,390 (—649) | —20,005 (—525) | —24,512 (—574) |
| காரணியல்லாப் பணிகள் (தேறிய) ... | — 201 (—8) | 255 (8) | 74 (3) | 96 (3) |
| காரணிப் பணிகள் (தேறிய) ... | — 3,445 (—125) | — 3,871 (—117) | —4,699 (—124) | —5,499 (—129) |
| தனியார் மாற்றல்கள் (தேறிய) ... | 7,212 (262) | 7,983 (242) | 9,226 (242) | 9,998 (234) |
| அலுவல்சார் மாற்றல்கள் (தேறிய) ... | 4,828 (172) | 5,114 (153) | 5,311 (139) | 6,076 (142) |
| நடைமுறைக் கணக்கு நிலுவை ... | —11,408 (—410) | —11,909 (—363) | —10,093 (—265) | —13,841 (—324) |
| மொத்த நிலுவை ... | —1,060 (—111) | —2,124 (—74) | —1,801 (—72) | —5,000 (—101) |
| **சில முக்கிய குறிகாட்டிகள்** | | | | |
| வர்த்தக மாற்று விகிதம் (1981=100) ... | 115 | 111 | 114 | 106 |
| தேறிய பெற்றோலிய இறக்குமதிகள் ... | 7,109 (257) | 3,935 (120) | 6,124 (161) | 5,574 (130) |
| மொத்த உள்நாட்டு உற்பத்தியின் சதவீதமாக நடைமுறைக் கணக்குக்குறை ... | 6.9 | 6.7 | 5.1 | 6.2 |
| மொத்த பன்னாட்டு ஒதுக்கு ... | 18,367 (611) | 17,152 (492) | 18,134 (415) | 17,482 (393) |
| பன்னாட்டு ஒதுக்குகள்—மாதங்களுக்கான இறக்கு மதிகளில் (இ) ... | 4.4 | 3.7 | 2.9 | 2.6 |

மூலம்: இலங்கை மத்திய வங்கி

(அ) திருத்தியமைக்கப்பட்டது.
(ஆ) தற்காலிகமானவை.
(இ) அடுத்த ஆண்டின் இறக்குமதிகளுக்காக சிஎஉ நியதியில் திட்டமிடப்பட்டது.

1988 ஆம் ஆண்டு, அரசின் இறைத் தொழிற்பாடுகளும் அதிகளவு வீழ்ச்சியைப் பதிவு செய்தன. தற்காலிகத் தரவுகளின்படி வரவு செலவுத் திட்டத் தின் நடைமுறைக் கணக்கு 1987 இன் ரூ. 25,850 இலட்சம் (மொ.உ.உ. இன் 1.3 சதவீதம்) கொண்ட மிகைக்கு அதிகளவு மாறாக 1988 இல் ரூ. 60,310 இலட்சம் (மொ.உ.உ. இன் 2.7 சதவீதம்) கொண்ட குறையினைப் பதிவு செய்தது. இதேவேளை மொத்த வரவு செலவுத் திட்டக்குறை (கொடைகளுக்கு முன்னர்) ஒப்புதலளிக்கப்பட்ட மதிப்பீடுகளில் எதிர்பார்க்கப்பட்ட குறையான ரூ. 263,090 இலட்சத்துடன் (மொ.உ.உ. இன் 11.6 சதவீதம்) ஒப்பிடுகையில் 1988 இல் ரூ. 338,540 இலட்சமாக (மொ.உ.உ. இன் 15.2 சதவீதம்) விளங்கியது. 1987 இல் மொத்தக் குறை ரூ. 217,490 இலட்சம் (மொ.உ.உ. இன் 11.1 சதவீதம்) ஆகும். 1988 இல் விரிவடைந்த வரவு செலவுத் திட்டக் குறை, அக்குறையினை நிதியிடுவதற்கு வங்கிக் கொடுகடனில் அதிகளவு தங்கியிருக்க வேண்டிய நிலையை ஏற்படுத்தியது. வங்கித் தொழில் முறையிலிருந்து அவ்வாறு பயன்படுத்தப்பட்ட மூலவளங்கள் 1987 இன் ரூ. 35,410 இலட்சத்துடன் (மொ.உ.உ. இன் 1.8 சதவீதம்) ஒப்பிடுகையில் 1988 இல் ரூ. 90,780 இலட்சமாக (மொ.உ.உ. இன் 4.1 சதவீதம்) விளங்கியன. இவ்வபிவிருத்திகள் 1987 இன் செயற்பாடுகளுடனும் மூல மதிப்பீடுகளில் எதிர்பார்க்கப்பட்ட செயற்பாடுகளுடனும் ஒப்பிடுகையில் 1988 இன் அரசின் இறைத் தொழிற்பாடுகள் அதிகளவு மோசமடைந்திருப்பதைக் காட்டுகின்றன.

1988 இல் இறை வெளிப்பாட்டின் வீழ்ச்சிக்குப் பல விடயங்கள் காரணமாக இருந்தன. முதலாவது நாட்டில் நிலவிய அமைதியற்ற நிலைமைகளும் ஆங்காங்கே ஏற்பட்ட குழப்பங்களும் பல மூலங்களிலிருந்தான அரசிறைச் சேகரிப்பைக் குறைவடையச் செய்தன. இரண்டாவது தனியார் ஊதியங்கள், வட்டிக் கொடுப்பனவுகள், உணவு முத்திரைகள், வரட்சி நிவாரணம், பாதுகாப்பு தொடர்பான செலவுகள் என்பன காரணமாக ஏற்பட்ட அதிகரித்த கடப்பாடுகள் நடைமுறைச் செலவில் கணிசமான விரிவாக்கத்தினை ஏற்படுத்தின. மூன்றாவது உணவுக் கொள்வனவும் பகிர்ந்தளித்தலும் கணக்கின் கீழான முற்பணக் கணக்குத் தொழிற்பாடுகள் செலவில் கணிசமான அதிகரிப்பினை விளைவித்தன. நாலாவது இவ்வாண்டில் அதிகளவு எண்ணிக்கையான துணை மூலதனச் செலவு ஒதுக்குகளை மேற்கொள்ள வேண்டியிருந்தது. இக்காரணிகளின் கூட்டு விளைவாக வரவு செலவுத் திட்டப் பற்றுக்குறை (கொடைகளுக்கு முன்னர்) 1987 இன் ரூ. 217,490 இலட்சத்திலிருந்து 1988 இல் ரூ. 338,540 இலட்சத்திற்கு 56 சதவீதத்தால் அதிகரித்தது.

1988 இல் அரசின் அரசிறை ரூ. 421,490 இலட்சமாக முன்னைய ஆண்டின் ஏறத்தாழ அதே மட்டத்தில் விளங்கியது. எனினும் மொத்த உள்நாட்டு உற்பத்தி தொடர்பாக அரசின் அரசிறை 1987 இன் 21.4 சதவீதத்திலிருந்து 1988 இல் 18.9 சதவீதத்திற்கு வீழ்ச்சியடைந்தது. நலிவுற்ற அரசிறைச் செயலாற்றத்தைப் பிரதிபலிக்கும் வகையில் வரி/மொ.உ.உ. விகிதம் 1987 இன் 17.9 சதவீதத்திலிருந்து 1988 இல் 16 சதவீதத்திற்கு வீழ்ச்சியடைந்தவேளையில் வரியல்லா அரசிறை/மொ.உ.உ. விகிதமும் 3.6 சதவீதத்திலிருந்து 2.9 சதவீதத்திற்கு வீழ்ச்சியடைந்தது. வரி அரசிறை ரூ. 356,910 இலட்சமாக விளங்கி 2 சதவீதமான சிறு அதிகரிப்பினைப் பதிவு செய்ததுடன் முன்னைய ஆண்டின் பங்களிப்பான 83 சதவீதத்துடன் ஒப்பிடுகையில் 1988 இல் மொத்த அரசிறையில் 85 சதவீதத்திற்கு வகை கூறியது. வரி அரசிறை/மொ.உ.உ. விகிதத்திலேற்பட்ட வீழ்ச்சி 1988 இல் அரச அரசிறையின் வளர்ச்சி வீதம் வருமானத்தின் வளர்ச்சி வீதத்துடன் ஒத்துப்போகத் தவறிவிட்டதை எடுத்துக்காட்டுவதாக அமைகிறது.

அட்டவணை 1.4

## அரசின் இறைத் தொழிற்பாடுகளின் தொகுப்பு

பத்து இலட்சம் ரூபாய்களில்

| விடயம் | 1984 | 1985 | 1986 | 1987 | 1988 மதிப்பீடுகள் |
|---|---|---|---|---|---|
| மொத்த அரசிறையும் கொடைகளும் ... | 37,354 | 39,556 | 40,991 | 46,822 | 47,877 |
| மொத்த அரசிறை ... ... | 34,061 | 36,249 | 37,238 | 42,145 | 42,149 |
| வரி அரசிறை ... ... | 29,939 | 30,442 | 31,272 | 35,119 | 35,691 |
| வரியல்லா அரசிறை ... ... | 4,122 | 5,807 | 5,966 | 7,026 | 6,458 |
| கொடைகள் ... ... | 3,293 | 3,307 | 3,753 | 4,677 | 5,728 |
| செலவினமும் மீள் கொடுப்பனவைக் கழித்த கடன் வழங்கலும் ... ... | 47,837 | 55,234 | 59,193 | 63,894 | 76,003 |
| நடைமுறை ... ... | 24,630 | 32,645 | 33,966 | 39,560 | 48,180 |
| மூலதனம் ... ... | 19,915 | 21,530 | 23,236 | 22,816 | 21,212 |
| மீள் கொடுப்பனவைக் கழித்தகடன் வழங்கல் | 3,292 | 1,059 | 1,991 | 1,518 | 6,611 |
| நடைமுறைக் கணக்கு மிகை/குறை (—) ... | 9,431 | 3,604 | 3,272 | 2,585 | — 6,031 |
| வரவு செலவுத்திட்டக் குறை (கொடைக்கு முன்) ... ... | —13,776 | —18,985 | —21,956 | —21,749 | —33,854 |
| வரவு செலவுத்திட்ட குறை (கொடைக்குப்பின்) ... ... | —10,483 | —15,678 | —18,204 | —17,072 | —28,126 |
| நிதியிடல் ... ... | 10,483 | 15,678 | 18,204 | 17,072 | 28,126 |
| வெளிநாட்டுக்கடன்பாடுகள் ... | 6,492 | 7,109 | 9,061 | 5,716 | 7,029 |
| உள்நாட்டுக்கடன்பாடுகள் ... ... | 3,991 | 8,569 | 9,143 | 11,356 | 21,097 |
| சந்தையல்லாக்கடன்பாடுகள் ... ... | 951 | — 1,801 | — 669 | 1,415 | 2,703 |
| சந்தைக்கடன்பாடுகள் ... ... | 3,040 | 10,370 | 9,812 | 9,941 | 18,394 |
| வங்கியல்லா ... ... | 5,135 | 5,659 | 6,765 | 6,400 | 9,316 |
| வங்கி ... ... | — 2,095 | 4,711 | 3,047 | 3,541 | 9,078 |

## மொத்த உள்நாட்டு உற்பத்தியின் சதவீதமாக

| விடயம் | 1984 | 1985 | 1986 | 1987 | 1988 |
|---|---|---|---|---|---|
| மொத்த அரசிறையும் கொடைகளும் ... | 24.3 | 24.4 | 22.8 | 23.8 | 21.5 |
| மொத்த அரசிறை ... ... | 22.2 | 22.3 | 20.8 | 21.4 | 18.9 |
| வரி அரசிறை ... ... | 19.5 | 18.7 | 17.4 | 17.9 | 16.0 |
| வரியல்லா அரசிறை ... ... | 2.7 | 3.6 | 3.3 | 3.6 | 2.9 |
| கொடைகள் ... ... | 2.1 | 2.0 | 2.1 | 2.4 | 2.6 |
| செலவினமும் மீள் கொடுப்பனவைக் கழித்த கடன் வழங்கலும் ... ... | 31.1 | 34.0 | 33.0 | 32.5 | 34.1 |
| நடைமுறை ... ... | 16.0 | 20.1 | 18.9 | 20.1 | 21.6 |
| மூலதனம் ... ... | 13.0 | 13.3 | 13.0 | 11.6 | 9.5 |
| மீள் கொடுப்பனவைக் கழித்த கடன் வழங்கல் | 2.1 | 0.7 | 1.1 | 0.8 | 3.0 |
| நடைமுறைக் கணக்கு மிகை/குறை (—) ... | 6.1 | 2.2 | 1.8 | 1.3 | — 2.7 |
| வரவு செலவுத் திட்டக்குறை (கொடைகளுக்கு முன்) ... ... | -9.0 | -11.7 | -12.2 | -11.1 | — 15.2 |
| வரவு செலவுத் திட்டக்குறை (கொடைகளுக்குப் பின்) ... ... | -6.8 | -9.7 | -10.1 | -8.7 | — 12.6 |
| நிதியிடல் ... ... | 6.8 | 9.7 | 10.1 | 8.7 | 12.6 |
| வெளிநாட்டுக் கடன்பாடுகள் ... ... | 4.2 | 4.4 | 5.1 | 2.9 | 3.2 |
| உள்நாட்டுக் கடன்பாடுகள் ... ... | 2.6 | 5.3 | 5.1 | 5.8 | 9.5 |
| சந்தையல்லாக் கடன்பாடுகள் ... | 0.6 | -1.1 | -0.4 | 0.7 | 1.2 |
| சந்தைக் கடன்பாடுகள் ... ... | 2.0 | 6.4 | 5.5 | 5.1 | 8.2 |
| வங்கியல்லா ... ... | 3.3 | 3.5 | 3.8 | 3.3 | 4.2 |
| வங்கி ... ... | — 1.4 | 2.9 | 1.7 | 1.8 | 4.1 |

மூலம்: இலங்கை மத்திய வங்கி.

செலவுப் பக்கத்தில் 1988 இல் மொத்த நடைமுறைச் செலவு ரூ. 481,800 இலட்சமாக விளங்கி முன்னைய ஆண்டினைவிட 22 சதவீத அதிகரிப்பைப் பதிவு செய்தது. மொ.உ.உ. வின் விகிதமாக நடைமுறைச் செலவு 1987 இன் 20.1 சதவீதத்திலிருந்து 1988 இல் 21.6 சதவீதத்திற்கு உயர்வடைந்தது. பொருட்களினதும் பணிகளினதும் மீதான செலவு ரூ. 219,160 இலட்சமாக விளங்கி மொத்த நடைமுறைச் செலவில் 45 சதவீதத்திற்கு வகை கூறியவேளையில் மாற்றல் கொடுப்பனவுகள் ரூ. 135,190 இலட்சமாக விளங்கி 28 சதவீதத்தைக் கொண்டிருந்தன. அரச படுகடன் மீதான மொத்த வட்டிக் கொடுப்பனவுகள் ரூ. 127,450 இலட்சமாக விளங்கி 1988 இன் மொத்த நடைமுறைச் செலவில் 26 சதவீதத்தைக் கொண்டிருந்தன.

நடைமுறைச் செலவு போலன்றி மூலதனச் செலவானது ஒப்புதலளிக்கப்பட்ட மதிப்பீடுகள், 1987 இல் அடைந்த மட்டம் ஆகிய இரண்டும் தொடர்பாக வீழ்ச்சியைப் பதிவு செய்தது. இவ்வாண்டின்மூலதனச் செலவு ஒப்புதலளிக்கப்பட்ட மதிப்பீடுகளில் ஒதுக்கப்பட்ட ரூ. 270,170 இலட்சத்துடன் ஒப்பிடுகையில் ரூ. 212,120 இலட்சமாக விளங்கியது. முன்னைய ஆண்டில் மூலதனச் செலவு ரூ. 228,160 இலட்சமாக விளங்கியதுடன் இது 1988 இல் 7 சதவீத வீழ்ச்சியைக் காட்டுகிறது. இதன்படி மொத்த உள்நாட்டு உற்பத்தியின் விகிதாசாரமாக அரசின் மூலதன ஆக்கம் 1987 இன் 11.6 சதவீதத்திலிருந்து 1988 இல் 9.5 சதவீதத்திற்கு வீழ்ச்சியடைந்தது.

1988 இல் அரசிறை, கொடைகள் ஆகியவற்றின் மூலம் திரட்டப்பட்ட மொத்த வரவு செலவுத் திட்ட மூலவளங்கள் ரூ. 478,770 இலட்சமாக அமைந்தன. மறுபுறத்தில், நடைமுறைச் செலவினத்தில் ஏற்பட்ட மிகக் கூடியஅளவு அதிகரிப்பின் காரணமாக மொத்தச் செலவினம் ரூ. 760,030 இலட்சத்திற்கு அல்லது 19 சதவீதத்தினுல் உயர்வடைந்தது. இதனுல் ஏற்பட்ட வரவு செலவுத் திட்டக்குறை (கொடைகளுக்குப் பின்) ரூ. 281,260 இலட்சமாக அமைந்து 1987 இன் கொடையினைவிட 65 சதவீதம் உயர்வானதாக இருந்தது. மொத்த உள்நாட்டு உற்பத்தியின் விகிதாசாரமாகப் பார்க்கையில் பற்றுக்குறை 1987 இன் 8.7 சதவீதத்திலிருந்து 1988 இல் 12.6 சதவீதத்திற்கு அதிகரித்துள்ளது.

மிகப் பெருமளவிற்கு விரிவடைந்த வரவு செலவுத் திட்டக் குறையின் பின்னணியில், குறையை நிதியிடுவதற்காக மூலவளங்களைத் திரட்டுவது 1988 இல் மிக உறுத்தலான பிரச்சினைகளைத் தோற்றுவித்துள்ளது. வெளிநாட்டு மூலங்களிலிருந்து கிடைக்கத்தக்கதாக இருந்த மூலவளங்கள் ரூ. 70,290 இலட்சமாக விளங்கி முன்னைய ஆண்டில் கிடைக்கத்தக்கதாகவிருந்த தொகையினைவிட 23 சதவீத அதிகரிப்பினைக் கொண்டிருந்தபோதும் பற்றுக்குறையினை நிதியிடத் தேவையான மூலவளங்களில் நான்கிலொரு பங்கினை மட்டுமே இது வழங்கியது. இதன்படி இந் நோக்கத்திற்காகப் பெருமளவு உள்நாட்டுச் சந்தைக் கடன்பாடுகளை நாட வேண்டியிருந்தது. 1988 இல் சந்தைக் கடன்பாடுகள் ரூ. 183,940 இலட்சத்தை வழங்கி முன்னைய ஆண்டில் கடன்பட்ட தொகையைவிட 85 சதவீதம் அதிகமானதாக விளங்கியது. இது வங்கியல்லா மூலங்களிலிருந்தான ரூ. 93,160 இலட்சத்தையும் வங்கி மூலங்களிலிருந்தான ரூ. 90,780 இலட்சத்தினையும் உள்ளடக்கியிருந்தது. பின்னையதில் ரூ. 9,260 இலட்சம் மத்திய வங்கியின் தற்காலிக முற்பணங்கள் மூலமாகவும் ரூ. 103,630 இலட்சம் திறைசேரி உண்டியல்களின் வழங்கல் மூலமாகவும் பெறப்பட்டன. 1988 இல் வரவு செலவுத் திட்டக் குறையை நிதியிடுவதற்காக வங்கித்தொழில் முறையிலிருந்து பயன்படுத்தப்பட்ட மூலவளங்கள் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 4.1 சதவீதமாக அமைந்து

அண்மைக் காலத்தில் பதிவு செய்யப்பட்டதான மிக உயர்ந்த தனியொரு ஆண்டாக விளங்கியது.

1988 இறுதியில் வெளிநின்ற அரச படுகடன் ரூ. 2,230,020 இலட்சமாக விளங்கியது. இது 1987 இன் இறுதியில் வெளிநின்ற படுகடனைவிட ரூ. 321,930 இலட்சம் அல்லது 17 சதவீதம் கொண்டதொரு அதிகரிப்பாகும். மொத்தப் படுகடனில் உள்நாட்டுப் படுகடன் ரூ. 985,940 இலட்சத்திற்கு 25 சதவீதத் தினால் உயர்வடைந்தவேளையில் வெளிநாட்டுப் படுகடன் ரூ. 1,244,080 இலட் சத்திற்கு 11 சதவீதத்தினால் உயர்வடைந்தது. 1988 இல் வெளிநின்ற உள்நாட் டுப் படுகடனில் நடுத்தர, நீண்டகாலப் படுகடன் முன்னைய ஆண்டின் 57 சத வீதத்திலிருந்து வீழ்ச்சியடைந்து 51 சதவீதத்திற்கு வகை கூறியது. இதன் விளைவாகக் குறுங்காலப் படுகடனின் பங்கு 1987 இன் 43 சதவீதத்திலிருந்து 1988 இல் 49 சதவீதத்திற்கு உயர்வடைந்தது. குறுங்கால முதிர்ச்சிகள் தொடர் பாகப் படுகடன் அமைப்பில் ஏற்பட்ட மாற்றம் இவ்வாண்டில் திறைசேரி உண்டியல்கள் மூலமாகப் பெறப்பட்ட பெருமளவு கடன்பாடுகளின் தவிர்க்க முடியாத விளைவாக இருந்தது. இது உறுதிவாய்ந்த எதிர்கால இறை நலன்களின் பின்னணியில் கவனத்தில் கொள்ளப்பட வேண்டியதொரு அபிவிருத்தியாகும்.

1988 இல் இறை அபிவிருத்திகள் பொருளாதாரத்தின் பேரண்ட சமநிலை யற்ற தன்மையில் மேலும் மோசமான தன்மையை விளைவித்துப் பணநிரம்பல், விலைகள், சென்மதி நிலுவை, வெளிநாட்டு ஒதுக்குகள் என்பனவற்றின் மீதான தாக்கத்திற்கும் காரணமாயின. பாதகமான விளைவுகளை ஏற்படுத்தும் வங்கி நிதியிடலை வேண்டிநிற்கும் பெருமளவு விரிவடைந்த வரவு செலவுத்திட்டக் குறை யின் பின்னணியில், நாணயக் கொள்கையைக் குறிப்பாக வலுவான திறந்த சந்தைத் தொழிற்பாடுகள் மூலமாக இறுக்கமாக்குவதன் வாயிலாகப் பொருளா தாரத்திலுள்ள மிகையான திரவத்தன்மையை ஈர்ப்பதற்கு முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன. எனினும், திறைசேரி உண்டியல்கள் மீதான வருவாயை ஆண்டொன்றிற்கு ஏறத்தாழ 19 சதவீதம் வரையில் உயர்வதற்கு அனுமதித்த பின்னருங்கூட அத்தகைய நடவடிக்கை வரவு செலவுத் திட்டக் குறையின் மூலம் உருவாக்கப்பட்ட மிகையான திரவத்தன்மையைச் சமமாக்குவதில் வரை யறுக்கப்பட்ட வெற்றியையே கொண்டிருக்கின்றமையினால் பேரண்ட உறுதித் தன்மை நிலவ வேண்டுவது மிக இன்றியமையாததாக இருப்பின் வலுவான இறை நிலைமைக்கான ஒருங்கிணைந்த நடவடிக்கைகளுக்கான தேவை வலியுறுத்தப்பட வேண்டும்.

1988 ஆம் ஆண்டு பண நிரம்பலின் வளர்ச்சி குறிப்பிடத்தக்க அதிகரிப் பினைக் காட்டியது. 1987 இன் இறுதியில் 18 சதவீதமாக அமைந்திருந்த குறுகிய பண நிரம்பலின் ($M_1$) ஆண்டு வளர்ச்சி வீதம் 1988 இல் 29 சதவீதத்திற்கு மிகக் கூடியளவில் அதிகரித்த வேளையில் விரிந்த பண நிரம்பலின் ($M_2$) ஆண்டு வளர்ச்சி வீதமும் இவ்விரு ஆண்டுகளுக்குமிடையில் 15 சதவீதத்திலிருந்து 16 சத வீதத்திற்கு அதிகரித்தது. முன்னர் குறிப்பிடப்பட்டவாறு, கொழும்பு நுகர்வோர் விலைச் சுட்டெண்ணின் மாற்றங்களினால் அளவிடப்பட்டவாறு பணவீக்க வீதம் முன்னைய ஆண்டின் வீதத்தினைவிட இரு மடங்காக விளங்கியது. இப்பின்னணியில் 1988 இல் நாணயக் கொள்கை மிகக் கடுமையான நிலைப்பாட்டினை எடுக்க வேண்டி யிருந்தது. வர்த்தக வங்கிகளின் ஒதுக்குத் தேவைகள் குறிப்பிடத்தக்களவில் இறுக்கமாக்கப்பட்ட வேளையில் பொருளாதாரத்திலுள்ள மிகையான திரவத் தன்மையை அகற்றுவதற்காக ஆண்டின் பெரும்பகுதியில் வலுவான திறந்த சந்தைத் தொழிற்பாடுகள் பின்பற்றப்பட்டன. பின்னையதின் முக்கியத்துவம்,

இதன் தொழிற்பாடுகளில் பெருமளவு சந்தை சார்ந்த தன்மையைக் கொண்டிருந்த திறைசேரி உண்டியல் சந்தையில் மிகக் கூடுதலாகக் காணப்பட்டது. இவ்வபிவிருத்திகளைத் தொடர்ந்து குறுங்கால வட்டி வீதங்கள் உறுதியாக இருந்ததெனினும் வட்டிவீத அமைப்பில் ஏற்பட்ட பொதுவான மாற்றங்கள் சந்தை அபிவிருத்திகளினுல் அவை கட்டுப்படுத்தப்பட்டிருந்தமையிலும் பார்க்கக் குறைவான பரவும் தன்மையையே கொண்டிருந்தன. பொருளாதாரத்தின் உற்பத்தியாக்கத் துறைகளின் நடவடிக்கைகளை மேம்படுத்துதல், அதே போன்று வர்த்தக வங்கிகளினுல் தற்காலிகமாக எதிர்நோக்கப்பட்ட திரவப் பிரச்சினைகளைத் தீர்த்தல் ஆகிய இரண்டின் பொருட்டும் மத்திய வங்கி தொடர்ந்தும் மீள் நிதியிடல் வசதிகளை வழங்கியது.

1988 இல் பணநிரம்பலின் வளர்ச்சியில் ஏற்பட்ட விரைவு குறுகிய நாணயக் கூட்டில் கூடுதலாகப் பிரதிபலித்தது. பொது மக்கள் வசமிருந்த நாணயங்களையும் கேள்வி வைப்புக்களையும் உள்ளடக்கியதென வரைவிலக்கணம் செய்யப்பட்ட குறுகிய பணநிரம்பல் ($M_1$) 1987 இன் ரூ. 39,040 இலட்சம் அல்லது 18 சதவீதம் கொண்ட அதிகரிப்புடன் ஒப்பிடுகையில் ரூ. 72,960 இலட்சத்தால் அல்லது 29 சதவீதத்தினுல் உயர்வடைந்தது. ஒப்பிடுகையில் $M_1$ ஐயும் பொது மக்களால் வர்த்தக வங்கிகளில் வைத்திருக்கப்பட்ட தவணை, சேமிப்பு வைப்புக்களையும் (போலி நாணயம்) உள்ளடக்கியது என வரைவிலக்கணம் செய்யப்பட்ட விரிந்த பண நிரம்பல் ($M_2$) ரூ. 96,110 இலட்சத்தினுல் அல்லது 16 சதவீதத்தினுல் விரிவடைந்தது. 1987 இல் விரிந்த பணநிரம்பலில் ஏற்பட்ட தொடர்பான அதிகரிப்பு ரூ. 74,750 இலட்சமாக அல்லது 15 சதவீதமாக இருந்தது. விரிந்த பணநிரம்பலில் எற்பட்ட குறைவான வளர்ச்சிக்கு வர்த்தக வங்கிகளில் பொது மக்களால் வைத்திருக்கப்பட்ட தவணை சேமிப்பு வைப்புக்களின் வளர்ச்சி 1987 இன் ரூ. 35,710 இலட்சம் அல்லது 12 சதவீதத்துடன் ஒப்பிடுகையில் 1988 இல் ரூ. 23,150 இலட்சம் அல்லது 7 சதவீதத்தினுல் மெதுவான வீதத்தில் உயர்வடைந்தமையே முக்கிய காரணமாகும்.

$M_1$ இல் ஏற்பட்ட விரிவாக்கம் நாணயக் கூறிற்கும் (ரூ. 19,250இ லட்சம்) கேள்வி வைப்புக் கூறிற்கும் (ரூ. 19,790 இலட்சம்) இடையில் மிகவும் சமமாகப் பரவிக் காணப்பட்ட முன்னைய ஆண்டின் நிலைமைக்குப் பெருமளவு மாருக, 1988 இல் $M_1$ இல் ஏற்பட்ட விரிவாக்கம் ரூ. 49,920 இலட்சம் அல்லது 37 சதவீதத்தினுல் உயர்வடைந்து பொது மக்கள் வசமிருந்த நாணயங்களில் பெருமளவுக்குச் செறிந்து காணப்பட்டது. இதன் விளைவாக $M_1$ இல் நாணயக் கூறின் பங்கு 1987 இன் 54 சதவீதத்திலிருந்து 1988 இல் 57 சதவீதத்திற்கு உயர்வடைந்தது. இவ் விரும்பத்தகாத அபிவிருத்திக்கு நாட்டின் சில பகுதிகளில் வழமையான வங்கித்தொழில் பணிகள் தடங்கலுற்றமையும், நாட்டின் ஆங்காங்கே கிளம்பிய வன்முறையின் பின்னணியில் எதிர்பாரா அவசிய தேவைகளை ஈடுசெய்யப் பொது மக்கள் திரவச் சொத்துக்களை வைத்திருப்பதற்கு முன்னுரிமை அளித்தமையும், காரணங்களாக இருந்தன. பணநிரம்பலில் நாணயக்கூறில் ஏற்பட்ட மிகக் கூடியளவு அதிகரிப்புடன் சேர்ந்து, உயர்ந்த இந்நாணயங்களான அதாவது ரூ. 500, ரூ. 1,000 இன நாணயத் தாள்களுக்கான கேள்வியும் குறிப்பிடத்தக்களவில் அதிகரித்தது. பொருளாதாரத்தில் காணப்படும் தொடர்ச்சியான பணவீக்கத் தாக்கத்தின் பின்னணியில் கொடுக்கல் வாங்கல் நோக்கங்களுக்கு உயர்ந்த பெறுமதி கொண்ட தாள்கள் பயன்படுத்தப்பட்டமையை இது பிரதிபலித்தது.

## அட்டவணை 1.5

## நாணய அளவுகள் 1983—1988

ரூபா பத்து இலட்சங்களில்

| விடயம் | 1983 | 1984 | 1985 | 1986 | 1987 | 1988 |
|---|---|---|---|---|---|---|
| **உள்நாட்டுக் கொடுகடனிலேற்பட்ட மாற்றம்** ... | **6,895** | **633** | **9,300** | **4,883** | **11,457** | **21,302** |
| அரசுக்கான தேறிய கொடுகடனிலேற்பட்ட அதிகரிப்பு ... | 383 | —2,979 | 5,793 | 2,198 | 4,502 | 9,017 |
| அரச கூட்டுத்தாபனங்களுக்கான கொடுகடனில் ஏற்பட்ட அதிகரிப்பு ... | —292 | —237 | 290 | 301 | 2,627 | 3,421 |
| கூட்டுறவு நிறுவனங்களுக்கான கொடுகடன் அதிகரிப்பு ... | 635 | —255 | —263 | 120 | —301 | 195 |
| ஏனைய தனியார் துறைக்கான கொடுகடன் அதிகரிப்பு ... | 6,170 | 4,104 | 3,480 | 2,263 | 4,629 | 8,669 |
| **தேறிய வெளிநாட்டு வங்கித் தொழில் சொத்துக்களில் ஏற்பட்ட மாற்றம்** ... | **815** | **6,777** | **—691** | **—414** | **—443** | **—3,772** |
| **மொத்தச் சொத்துக்கள் / பொறுப்புக்களில் ஏற்பட்ட மாற்றம்** ... | **7,710** | **7,410** | **8,609** | **4,468** | 11,014 | 17,535 |
| விரிந்த பணநிரம்பலில் ($M_2$) ஏற்பட்ட அதிகரிப்பு ... | 6,747 | 6,170 | 4,982 | 2,451 | 7,475 | 9,611 |
| ஏனைய பொறுப்புக்களில் (தேறிய) ஏற்பட்ட அதிகரிப்பு ... | 963 | 1,240 | 3,627 | 2,018 | 3,539 | 7,919 |

## நாணய அளவுகளில் சதவீத அதிகரிப்பு

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| மொத்த உள்நாட்டுக் கொடுகடனின் சதவீத அதிகரிப்பு ... | 16.3 | 1.3 | 18.6 | 8.2 | 17.9 | 28.2 |
| மொத்த சொத்துக்கள், பொறுப்புக்களின் சதவீத அதிகரிப்பு ... | 17.2 | 14.1 | 14.4 | 6.5 | 15.1 | 20.9 |
| மொத்த உள்நாட்டு கொடுகடன் அதிகரிப்பில் அரசின் சதவீதம் ... | 5.6 | —470.4 | 62.3 | 45.0 | 39.3 | 42.3 |
| மொத்த உள்நாட்டு கொடுகடன் அதிகரிப்பில் அரசு அல்லாத்துறையின் சதவீதம் ... | 94.4 | 570.4 | 37.7 | 55.0 | 60.7 | 57.7 |
| விரிந்த பண நிரம்பலின் ($M_2$) சதவீத அதிகரிப்பு ... | 22.1 | 16.6 | 11.4 | 5.1 | 14.7 | 16.4 |
| குறுகிய பண நிரம்பலின் ($M_1$) சதவீத அதிகரிப்பு ... | 25.4 | 14.1 | 11.5 | 12.9 | 18.4 | 29.1 |

மூலம்: இலங்கை மத்திய வங்கி

வர்த்தக வங்கிகளின் தவணைச் சேமிப்பு வைப்புக்களின் (போலி நாணயம்) வளர்ச்சியில் ஏற்பட்ட மெதுவான போக்கு 1988 இல் காணப்பட்ட இன்னொரு பாதகமான அபிவிருத்தியாகும். 1988 இல் போலி நாணயத்தின் வளர்ச்சி 1987 இல் ரூ. 35,710 இலட்சம் அல்லது 12 சதவீதம் கொண்ட விரிவாக்கத் துடன் ஒப்பிடுகையில் ரூ. 23,150 இலட்சம் அல்லது 7 சதவீதமாக மட்டும் காணப்பட்டது. 1988 இல் போலி நாணயத்தின் வளர்ச்சியில் ஏற்பட்ட வீழ்ச்சி, பொருளாதாரத்தின் உயர்ந்து செல்லும் பணவீக்கப் போக்குகளின் பின்னணியில் முதலீட்டுக்கான வழியாக வங்கி வைப்புக்கள் கவரும் தன்மையை இழந்துவிட்டமையைப் பெரும்பாலும் பிரதிபலித்தது. போலி நாணயத்தில் ஏற்பட்ட வளர்ச்சி முக்கியமாக ஏனைய தனியார்துறைக் கூறுகளிலிருந்து அதாவது உண்மையான தனியார்துறையிலிருந்து கிடைத்ததாகும். இவற்றின் தவணை சேமிப்பு வைப்புக் கள் ரூ. 21,000 இலட்சத்தினுல் அல்லது 8 சதவீதத்தினுல் உயர்வடைந்தன. ஒப்பிடுகையில் அரச கூட்டுத்தாபனங்களின் தவணை, சேமிப்பு வைப்புக்கள் சிறி தளவு அதிகரிப்பினை மட்டும் பதிவு செய்த வேளையில் கூட்டுறவு நிறுவனங்களின் அத்தகைய வைப்புக்கள் வீழ்ச்சியினைப் பதிவு செய்தன.

1988 இல் பணநிரம்பலின் மீது வெளிநாட்டுத் துறைத் தொழிற்பாடுகள் தொடர்ந்து நான்காவது ஆண்டாகச் சுருக்கத் தாக்கத்தை ஏற்படுத்தின. மொத் தத்தில் 1988 இல் வெளிநாட்டு வங்கிச் சொத்துக்கள் (தேறிய) ரூ. 37,720 இலட்சத்தினுல் அல்லது 45 சதவீதத்தினுல் வீழ்ச்சியடைந்தன. 1985, 1986, 1987 ஆம் ஆண்டுகளில் இச்சொத்துக்களில் ஏற்பட்ட வீழ்ச்சிகள் முறையே ரூ. 6,910 இலட்சம் அல்லது 7 சதவீதமாகவும், ரூ. 4,140 இலட்சம் அல்லது. 4 சதவீதமாகவும், ரூ. 4,430 இலட்சம் அல்லது 5 சதவீதமாகவும் இருந்தன 1988 இல் வங்கித் தொழில் முறையின் தேறிய வெளிநாட்டுச் சொத்துக்களில் ஏற்பட்ட பெருமளவு வீழ்ச்சி சென்மதி நிலுவை நிலைமையின் மோசமான தன்மையைப் பிரதிபலித்தது. 1988 இல் சென்மதி நிலுவையின் பொதுவான குறை 1986 இன் சிஎஉ 730 இலட்சத்துடனும் 1987 இன் சிஎஉ 720 இலட்சத் துடனும் ஒப்பிடுகையில் சிஎஉ 1,010 இலட்சமாக இருந்தது. 1984 ஆம் ஆண்டி லிருந்து வங்கித் தொழில் முறையின் தேறிய வெளிநாட்டுச் சொத்துக்களில் ஏற்பட்ட தொடர்ச்சியான வீழ்ச்சியும் 1988 இல் சென்மதி நிலுவை நிலைமையின் ஏற்பட்ட மோசமான தன்மையும் நாட்டில் விரிவடைந்து செல்லும் பேரண்டப் பொருளாதாரத்தின் உறுதியற்ற தன்மையின் பின்னணியில், இலங்கையின் வெளி நாட்டுத் துறையின் அதிகரித்த தாக்கத்தின் வெளிப்பாட்டினைப் பிரதிபலித்தது.

வெளிநாட்டுத்துறை, பண நிரம்பல் மீது சுருக்கத் தாக்கத்தை ஏற்படுத்தி யமையினுல், உள்நாட்டுக் கொடுகடனில் ஏற்பட்ட மிகக் கூடியளவு வளர்ச்சியே 1988 இல் நாணயக் கூட்டுக்களின் வளர்ச்சியில் ஏற்பட்ட விரைவிற்குப் பொறுப் பான முக்கிய காரணியாக இருந்தது. 1988 இல் உள்நாட்டுக் கொடுகடன் விரிவாக்கம் 1987 இன் ரூ. 114,570 இலட்சம் அல்லது 18 சதவீதத்துடன் ஒப்பிடுகையில் ரூ. 213,020 இலட்சமாக அல்லது 28 சதவீதமாக இருந்தது. 1988 இல் உள்நாட்டுக் கொடுகடனில் ஏற்பட்ட வளர்ச்சி வங்கித் தொழில் முறையிலிருந்து அரசிற்கான தேறிய கொடுகடனில் ஏற்பட்ட ரூ. 90,170 இலட்சம் அல்லது 33 சதவீதம் கொண்ட அதிகரிப்பினையும் வர்த்தக வங்கிகளி லிருந்து தனியார் துறைக்கான மொத்தக் கொடுகடனில் ஏற்பட்ட ரூ. 122,850 இலட்சம் அல்லது 25 சதவீத விரிவாக்கத்தையும் உள்ளடக்கியிருந்தது. முன்னைய ஆண்டில் இது தொடர்பான அதிகரிப்புக்கள் முறையே ரூ. 45,020 இலட்சம் அல்லது 20 சதவீதமாகவும், ரூ. 69,550 இலட்சம் அல்லது 17 சதவீதமாகவும் இருந்தன.

அண்மைய ஆண்டுகளில் வரவு செலவுத்திட்ட நோக்கங்களுக்காக அரசு தொடர்ச்சியான அடிப்படையில் வங்கிக் கொடுகடனை நாடுவது குறிப்பிடத்தக்க கவலைக்குரியதொரு விடயமாக இருக்கிறது. வரவு செலவுத் திட்ட நோக்கங்களுக்கான தேறிய வங்கிக் கடன்பாடுகள் முன்னெப்பொழுதையும்விட உயர்வான ரூ. 90,170 இலட்சத்திற்கு உயர்வடைந்து மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 4 சத வீதத்தினைக் கொண்டிருந்து 1988 இல் இப்பொறுப்பில் மேலும் பின்னடைவு ஏற்பட்டது. இந்தளவிற்கு வங்கி நிதியிடலை நாடுவதற்கான தேவை ஏற்பட்டமைக்கு அரசிறையில் ஏற்பட்ட வீழ்ச்சி அதேபோன்று செலவினத்தில் ஏற்பட்ட குறிப்பிடத்தக்க அதிகரிப்பு ஆகிய இரண்டினதும் விளைவாக வரவு செலவுத் திட்ட நிலைமை மோசமடைந்தமையே காரணமாகும். செலவினத்தில் ஏற்பட்ட அதிகரிப்பானது அரசதுறையின் பாதுகாப்பு மற்றும் கூலிகளில் ஏற்பட்ட அதிகரிப்புக்கள் என்பனவற்றின் காரணமாக அதிகரித்த கடப்பாடுகளின் முக்கிய விளைவேயாகும்.

வங்கித் தொழில் முறையிலிருந்தான அரசின் கடன்பாடுகளில் மிகப் பெரும் பங்கினை வர்த்தக வங்கிகளிலிருந்து பெற்ற முன்னைய ஆண்டின் நிலைமைகளுக்குப் பெருமளவு மாறாக 1988 இல் அத்தகைய கொடுகடனில் முக்கிய பங்கு மத்திய வங்கியிலிருந்து பெறப்பட்டது. இவ்வாண்டில் அனைத்தும் சேர்ந்து மத்திய வங்கியிலிருந்தான அரசிற்கான தேறிய கொடுகடன் ரூ. 83,160 இலட்சத்தினால் அல்லது 34 சதவீதத்தினால் உயர்வடைந்தவேளையில் வர்த்தக வங்கிகளிலிருந்தான அரசிற்கான தேறிய கொடுகடன் ரூ. 7,010 இலட்சமாக அல்லது மொத்த தேறிய வங்கிக் கடன்பாடுகளில் 8 சதவீதமாக விளங்கியது. வங்கித் தொழில்முறையிலிருந்து கடன்பெற வேண்டிய தேவை 1988 இன் இறுதி மாதங்களில் மிகக் குறிப்பிடத்தக்களவில் காணப்பட்டமை அதிகரித்த கடப்பாடுகள் அதே போன்று அரசிறைச் சேகரிப்புக்கள் தடங்கலுற்றமை ஆகிய இரண்டினையும் பிரதிபலிக்கின்றது. 1988 இன் இறுதி 2 மாதங்களிலும் அரசிற்கான தேறிய கொடுகடன் ரூ. 52,590 இலட்சத்தினால் உயர்வடைந்து நாணயக் கூட்டுக்களின்மீது குறிப்பிடத்தக்க தாக்கத்தினை ஏற்படுத்தியது.

ஒதுக்கு நாணய அடிப்படையில் ஏற்பட்ட விரிவாக்கத்திற்குப் பொறுப்பான முக்கிய காரணிகளில் ஒன்றாக அரசின் கடன்பாட்டுத் தேவைகளில் மத்திய வங்கியின் கடன் வழங்கல் விளங்கியது. இது 1988 இன் முன்னரைப் பகுதியில் ரூ. 24,680 இலட்சத்தினாலும் பின்னரைப் பகுதியில் மேலும் ரூ. 38,230 இலட்சத்தினாலும் அதிகரித்தது. இதனால் 1988 இல் ஒதுக்கு நாணய அடிப்படை ரூ. 62,910 இலட்சத்தினால் அதிகரித்தமை தேறிய வெளிநாட்டுச் சொத்துக்களில் ஏற்பட்ட வீழ்ச்சியினதும் (ரூ. 29,770 இலட்சம்), அரசிற்கான தேறிய கொடுகடன் (ரூ. 83,210 இலட்சம்), மீள் நிதியிடல் வசதிகளை உள்ளடக்கிய வர்த்தக வங்கிகளுக்கான கடன்கள் (ரூ. 3,580 இலட்சம்), மற்றும் ஏனைய விடயங்கள் (தேறிய) (ரூ. 5,890 இலட்சம்) என்பனவற்றில் ஏற்பட்ட அதிகரிப்புக்களினதும் இணைந்த விளைவாகும். ஒதுக்கு நாணய அடிப்படையில் ஏற்பட்ட பெருமளவு அதிகரிப்பு நாணயக் கூட்டுக்களிலும், விலைகளிலும் குறிப்பிடத்தக்களவிற்கு விரிவாக்கத் தாக்கங்களை ஏற்படுத்தியது என்பதில் ஐயமில்லை.

அரசின் அத்தகைய நடவடிக்கைகளுக்கு இணையான அபிவிருத்தியாக 1988 இல் தனியார்துறையும் பெருமளவு வங்கிக் கொடுகடனை நாடியது. முன்னைய ஆண்டின் ரூ. 69,550 இலட்சம் அல்லது 17 சதவீதம் கொண்ட அதிகரிப்புடன் ஒப்பிடுகையில் 1988 இல் தனியார் துறைக்கான மொத்தக் கொடுகடன், ரூ. 122,850 இலட்சத்தினால் அல்லது 25 சதவீதத்தினால் உயர்வடைந்தது. இவ்வதிகரிப்பில் ரூ. 86,890 இலட்சம் அல்லது 71 சதவீதம் கொண்ட பெருந்

தொகை ஏனைய தனியார் துறைக் கூறுகள் சார்ந்ததாக இருந்தது. இத்துறையினுல் பயன்படுத்தப்பட்ட கொடுகடன் முக்கியமாகக் கடன்கள், மற்றும் மேலதிகப் பற்றுக்கள் வடிவிலிருந்தன. இவை முறையே ரூ. 33,470 இலட்சம், ரூ. 27,610 இலட்சம் கொண்ட அதிசரிப்புக்களைப் பதிவு செய்தன. தனியார் துறையினுல் வங்கிக் கொடுகடன் அதிகளவில் பயன்படுத்தப்பட்டமை, பாதகமான சூழ்நிலைகளின் மத்தியிலும் இத்துறையில் உயர்ந்த மட்ட வர்த்தக நடவடிக்கைகள் பேணப்பட்டமையைப் பிரதிபலித்தது.

இவ்வாண்டில், அரச கூட்டுத்தாபனங்களுக்கான வர்த்தக வங்கிக் கொடுகடன், முன்னைய ஆண்டின் ரூ. 27,270 இலட்சம் அல்லது 55 சதவீத உயர்வுடன் ஒப்பிடுகையில் ரூ. 34,210 இலட்சம் அல்லது 46 சதவீதத்தினுல் அதிகரித்தது. இத்துறைக்கான கொடுகடனில் ஏற்பட்ட மிகக் கூடியளவு அதிகரிப்பு ஒருபுறத்தில், அமைதியற்ற நிலைமைகள் காரணமாக இலங்கைப் பெற்ரோலியக் கூட்டுத்தாபனம், அரச பெருந்தோட்டக் கூட்டுத்தாபனம், மக்கள் தோட்ட அபிவிருத்திச் சபை, கூட்டுறவு மொத்த விற்பனை நிலையம் போன்ற குறிப்பிட்ட முக்கிய கூட்டுத்தாபனங்களின் அதிகரித்த தொழிற்படு மூலதனத்தின் தேவைகளையும் மறுபுறத்தில் உயர்வடைந்து செல்லும் செலவுகள் சிறப்பான உயர்ந்த கூலிச் செலவுகளையும் பிரதிபலித்தது.

1988 இல் கூட்டுறவு நிறுவனங்களுக்கான கொடுகடன், முன்னைய ஆண்டின் ரூ. 3,010 இலட்சம் அல்லது 21 சதவீதம் கொண்ட வீழ்ச்சிக்கு மாருக, ரூ. 1,950 இலட்சம் அல்லது 17 சதவீதத்தினுல் உயர்வடைந்தது. இத்துறைக்கான கொடுகடனின் வளர்ச்சி நெற் கொள்வனவின் நிதியிடலுக்காகப் பயன்படுத்தப்பட்ட உயர்ந்தளவு கொடுகடனில் முழுமையாகப் பிரதிபலித்ததுடன் ஆண்டின் இறுதிக் காலாண்டில் காணப்பட்ட அமைதியற்ற நிலைமைகளின் காரணமாக இக் கொடுகடனைத் தீர்ப்பனவு செய்வதும் தாமதமாகியது.

1988 ஆம் ஆண்டு இலங்கையின் வங்கித் தொழிலில் முகவர் வங்கித் தொழில் என்ற புதிய கோட்பாடொன்று உருவானதை எடுத்துக் காட்டியது. 1988 ஒற்ரோபரில் தொடங்கிய இத்திட்டத்தின் கீழ், எளிதானதும் இலகுவானதுமான நியதிகளில் கிராமியத்துறையிலுள்ள கடன்படுநர்களுக்குச் சிறிய கடன்களை வழங்குவதற்குக் கிராமங்களிலுள்ள பணம் வழங்குவோரின் பணிகளில் இரு அரச வங்கிகளும் ஈடுபட்டன. இத்திட்டம் இரு அரச வங்கிகளினுல் முகவர்களை நியமிப்பதிலும், எதிர்காலக் கடன்படுநர்களுக்குக் கடன் வழங்குவதற்காக அவர்களுக்குக் கடன்களை வழங்குவதிலும் ஈடுபட்டுள்ளது. வேளாண்மை, கைத்தொழில் (சிறு அளவு), வர்த்தகம், நுகர்வு, நீண்டகால நுகர்வுப் பொருட்களின் கொள்வனவு போன்ற நோக்கங்களுக்கும் ஏனைய பல்வகை நோக்கங்களுக்கும் கடன்கள் கிடைக்கத்தக்கதாக இருந்தன. இத்திட்டத்தின் கீழ் 1988 இறுதியில் இலங்கை வங்கியினுல் 100 முகவர்களும் மக்கள் வங்கியினுல் 65 முகவர்களும் நியமிக்கப்பட்டனர்.

1988 இல் இலங்கையின் வட்டி வீதங்களில் பொதுவான உறுதியான தன்மை காணப்பட்டதுடன் இது குறுங்காலச் சந்தையில் மிகத் தெளிவாகக் காணப்பட்டது. திறைசேரி உண்டியல்களின் புதிய வழங்கல்களைத் தொடர்ச்சியாக மேற்கொண்டதன் மூலம் ஈடுசெய்யப்பட வேண்டியிருந்த அரசின் நிதிக்கான கேள்வி விரிவடைந்தமையை முக்கியமாகப் பிரதிபலிக்கின்ற விதத்தில் இச்சந்தையின் வட்டி வீதங்கள் குறிப்பாக 1988 இன் இறுதி நான்கு மாதங்களிலும் குறிப்பிடத்தக்க உயர்ந்த மட்டத்திற்கு அதிகரித்தன. திறைசேரி உண்டி

யல்கள் மீதான நிறையேற்றப்பட்ட சராசரி வீதம் 1987 இறுதியில் ஆண்டுக்கு 10.8 சதவீதத்திலிருந்து 1988 இறுதியில் 18.9 சதவீதத்திற்கு உயர்வடைந்தது. முதலாந்தர திறைசேரி உண்டியல் சந்தையின் வீதங்களில் ஏற்பட்ட மேல்நோக்கிய அசைவு இரண்டாந்தர திறைசேரி உண்டியல் சந்தையின் வட்டி வீதங்களின் மீது அதன் செல்வாக்கினைக் கொண்டிருந்தது. இதில் கழிவு, மீள் கழிவு வீதங்கள் ஓரளவு இதனையொத்த மாற்றங்களுக்குட்பட்டிருந்தன. அதேவேளை மத்திய வங்கிப் பிணைகள் மீதான நிர்ணயிக்கப்பட்ட வீதம் செத்தெம்பரில் 11 சதவீதத்திலிருந்து 14 சதவீதத்திற்கு உயர்வடைந்ததுடன் இப்பிணைகள் மீதான வருவாய் முன்னைய வழங்கல்களுக்குப் பொருந்தத்தக்கதாக இருந்த ஆண்டொன்றிற்கான 12.19 இலிருந்து 14.0 சதவீத அளவுகளிலிருந்து ஏலம் நடத்தப்பட்ட செத்தெம்பரில் ஆண்டொன்றிற்கு 16.20 சதவீதத்திற்கு உயர்வடைந்தது.

திறைசேரி உண்டியல் சந்தையில் வட்டி வீதங்கள் மேல்நோக்கி அசைந்தமையின் மூலம் உருவாக்கப்பட்ட தாக்கத்தினதும் வர்த்தக வங்கித்தொழில் அமைப்பில் குறுங்கால நிதிக்கான அதிகரித்த கேள்வியையும் பிரதிபலிக்கின்ற விதத்தில் வங்கிகளுக்கிடையிலான அழைப்புப் பணச் சந்தையின் வட்டி வீதங்கள் இவ்வாண்டில் குறிப்பிடத்தக்க அதிகரிப்புக்களைப் பதிவு செய்தன. இச் சந்தையின் வட்டி வீதங்கள் 1987 இன் இறுதியில் ஆண்டொன்றிற்கு 11—14 சதவீத வீச்சிலிருந்து 1988 இறுதியில் ஆண்டொன்றிற்கு 16—21 சதவீத வீச்சிற்கு உயர்வடைந்தது.

1988 இல் குறுங்கால வட்டி வீதங்கள் ஓரளவுக்கு மிகக் கூடுதலான அதிகரிப்புக்களைப் பதிவுசெய்தபோதும், வர்த்தக வங்கிகளின் வைப்பு வீதங்களினது அசைவு சார்புரீதியில் மிதமாகவே இருந்தது. ஆண்டின் தொடக்கத்தில் ஆண்டிற்கு 8.5 சதவீதத்திற்கும் 14.0 சதவீதத்திற்கும் இடையிலான வீச்சில் இருந்த ஓராண்டு வைப்புக்கள் மீதான ஆகக்கூடிய ஆகக் குறைந்த வீதங்கள் 1988 திசெம்பரில் ஆண்டிற்கு 9.0 சதவீதத்திற்கும், 15.5 சதவீதத்திற்கும் இடையிலான வீச்சிற்கு உயர்வுற்றன. அதேவேளை வைப்புச் சான்றிதழ்களுக்கு வர்த்தக வங்கிகளினால் வழங்கப்பட்ட வட்டி வீதங்கள் 1987 இறுதியில் ஆண்டிற்கு 7 இற்கும், 13 இற்கும் இடையிலான வீச்சுகளிலிருந்து 1988 இறுதியில் ஆண்டிற்கு 8 சதவீதத்திற்கும் 14 சதவீதத்திற்கும் இடையிலான வீச்சிற்கு உயர்வடைந்தன. நிதிக்கூட்டு நிலையங்கள் வைப்புச் சான்றிதழ்களுக்கு வழங்கிய வட்டி வீதங்கள் ஆண்டிற்கு 8 இற்கும் 18 சதவீத வீச்சிற்குமிடையிலிருந்து இவ்வாண்டுக் காலத்தில் ஆண்டிற்கு 10 இற்கும் 18 சதவீத வீச்சிற்குமிடையில் உயர்வுற்றுச் சிறிதளவு அதிகரிப்பினைப் பதிவு செய்தன.

வைப்புக்கள் மீது வழங்கப்பட்ட வீதங்களில் ஏற்பட்ட சிறிதளவு மேல்நோக்கிய அசைவு வட்டி வீதங்களில் உயர்ந்து செல்லும் போக்குக் காணப்பட்ட வர்த்தக வங்கிகளின் கடன் வழங்கல் வீதங்களில் பிரதிபலித்தது. 1988 இல் நிறையேற்றப்பட்ட சராசரி முதன்மைக் கடன் வழங்கல் வீதம் முன்னைய ஆண்டின் ஆண்டிற்கு 13.5 இற்கும் 15.1 சதவீதத்திற்கும் இடைப்பட்ட வீச்சிலிருந்து ஆண்டிற்கு 12 9 இலிருந்து 17.2 சதவீத வீச்சுக்கிடையில் தளம்பலுற்றது.

கடந்த அண்மைக் காலத்தில் சில நிதிக் கூட்டு நிலையங்களில் காணப்பட்ட பாதகமான அபிவிருத்திகளைக் கருத்திற் கொண்டு, 1988 இல் நிதிக்கூட்டு நிலையங்களின் வைப்பு வீதங்கள் மத்திய வங்கியினால் தொடர்ந்தும் ஒழுங்கமைக்கப்பட்டது. இது தொடர்பாக, வைப்புக்கள் மற்றும் நிதிக் கூட்டு நிலையங்களினால் வழங்கப்பட்ட ஏனைய கருவிகளின்மீது வழங்கப்பட்ட ஆகக்கூடிய வட்டி வீதங்

களைக் கட்டுப்படுத்தும் நோக்குடன் 1979 இன் எண் 27 கொண்ட நிதிக் கூட்டு நிலையங்கள் கட்டுப்பாட்டுச் சட்டத்தின் கீழ் வங்கி பல பணிப்புரைகளை வெளியிட்டது. இப்பணிப்புரைகளின் நியதிகளின்படி 12 மாத வைப்புக்களின்மீது செலுத்தப்படத்தக்க ஆகக்கூடிய வட்டி வீதம் ஆண்டிற்கு 16.7 சதவீதத்திற்கும், 24 சதவீதத்திற்கும் இடையில் வேறுபட்டது.

பணநிரம்பலில் ஏற்பட்ட மிகையான வளர்ச்சி, விலைகளின் மீதான தொடர்ச்சியான தாக்கம் என்பனவற்றின் பின்னணியில், 1988 இல் அதிகாரிகள் அதிகரிக்கின்ற கட்டுப்பாடான நாணயக் கொள்கையைப் பின்பற்ற வேண்டியிருந்தது. திறந்த சந்தைத் தொழிற்பாடுகளூடாக மிகையான திரவத்தன்மையை ஈர்த்துக் கொள்வதையே இது முக்கிய இலக்காகக் கொண்டிருந்தது. நடைமுறைப்படுத்தப்பட்ட வழிமுறைகள் மத்திய வங்கியல்லா மூலங்களுக்கான குறிப்பாக வர்த்தக வங்கிகளுக்கான திறைசேரி உண்டியல்களின் விற்பனை செறிவாக்கப்பட்டமை திறைசேரி உண்டியல்களுக்கான மீள் கொள்வனவுச் சந்தை அறிமுகப்படுத்தப்பட்டமை, மத்திய வங்கிப் பிணைகள் வழங்கப்பட்டமை என்பனவற்றை உள்ளடக்கியிருந்தன. திறைசேரி உண்டியல்கள் மீதான வட்டி வீதங்களைத் தீர்மானிப்பதில் சந்தை விசைகள் கட்டுப்பாடற்ற முறையில் தொழிற்பட அனுமதிக்கப்பட்டது. இதன் விளைவாக, 3 மாத திறைசேரி உண்டியல்கள் மீதான நிறையேற்றப்பட்ட சராசரி வட்டி வீதம் 1987 இறுதியில் 10.8 சதவீதத்திலிருந்து 1988 இறுதியில் ஆண்டிற்கு 18.9 சதவீதத்திற்கு உயர்வடைந்தது. மத்திய வங்கியும் இரண்டாந்தர திறைசேரி உண்டியல் சந்தையில் விற்பனையைச் செறிவுபடுத்துவதன் மூலம் அதன் திறைசேரி உண்டியல் உடைமையைக் குறைப்பதற்கு முயற்சித்தது. எனினும் திறைசேரி உண்டியல்களின் பெருமளவு புதிய வழங்கல்களை நோக்குகையில் மத்திய வங்கியின் வசமிருந்த திறைசேரி உண்டியல்களின் பங்கைக் குறைப்பதில் திறந்த சந்தைத் தொழிற்பாடுகள் வரையறுக்கப்பட்ட வெற்றியை மட்டுமே கொண்டிருந்தன. எனினும் மத்திய வங்கியல்லா மூலங்களின் மொத்த திறைசேரி உண்டியல் உடைமைகள் 1987 இறுதியில் ரூ. 82,230 இலட்சத்திலிருந்து 1988 இறுதியில் ரூ. 114,340 இலட்சத்திற்கு உயர்வடைந்து வெளிநின்ற மொத்த திறைசேரி உண்டியல்களில் 27 சதவீதத்தினைக் கொண்டிருந்தன.

இவ்வாண்டில் அறிமுகப்படுத்தப்பட்ட இன்னொரு முக்கிய நாணயக் கொள்கை வழிமுறை யாதெனில் வர்த்தக வங்கிகள் அவற்றின் வைப்புப் பொறுப்புக்களுக்கெதிராக அவை பேணவேண்டிய நியதி ஒதுக்குகளில் ஏற்பட்ட அதிகரிப்பேயாகும். 1988 பெப்புருவரியிலிருந்து அனைத்து வைப்புப் பொறுப்புக்களின் மீதுமான ஒதுக்கு விகிதம் 3 சதவீதப் புள்ளிகளால் 13 சதவீதத்திற்கு உயர்த்தப்பட்டது. இது 1988 செத்தெம்பரில் 2 சதவீதப் புள்ளியினால் 15 சதவீதத்திற்கு மேலும் உயர்த்தப்பட்டது. எனினும் வர்த்தக வங்கிகளின் உயர்ந்த இடையீட்டுச் செலவுகளைக் குறைக்கும் பொருட்டு இவ்வதிகரிப்புக்கள் இரு சந்தர்ப்பங்களிலும் அரச திறைசேரி உண்டியல்கள் வடிவில் பேணுவதற்கு அனுமதி வழங்கப்பட்டன.

நாணய நிலைமைகள், தடங்கலற்ற கட்டுப்பாடான நாணயக் கொள்கைகளைப் பின்பற்ற வேண்டிய தேவையினை வலியுறுத்தியபோதும் உள்நாட்டுக் குழப்பங்களினால் பாதிக்கப்பட்ட சில கைத்தொழிலாளர்களுக்கு உதவுவதற்கு வர்த்தக வங்கிகளின் திரவத்தன்மையைப் பெருக்குவதற்காகத் திசெம்பரில் இரண்டு சிறப்பு நிவாரண வழி முறைகளை அறிமுகப்படுத்த வேண்டியிருந்தது. முதலாவது மத்திய வங்கி நாணய விதிச் சட்டத்தின் பிரிவு 83 (1) (இ) இன் நியதிகளின்படி பாதிக்கப்பட்ட வர்த்தக வங்கிகளுக்கு ஆண்டிற்கு 15 சதவீதம் கொண்ட சிறப்பு வட்டி

வீதத்தில் தற்காலிகக் கடன்களின் வடிவில் உதவியை வழங்கியது. இரண்டாவது வர்த்தக வங்கிகளுக்கு மேலதிக தற்காலிகக் கடன் வசதிகள் வழங்கப்பட்டன. இதன் கீழ் ஏற்றுமதியாளர்களுக்குக் கப்பற்படுத்தலுக்கு முந்திய முற்பணங்கள் தொடர்பாக வர்த்தக வங்கிகளினால் வழங்கப்பட்ட மீள் நிதியிடலைப் பொறுத்த வரை மீளச் செலுத்தவேண்டிய காலம் வழமையான காலப்பகுதியான 3 மாதங்களிலிருந்து 5 மாதங்களுக்கு நீடிக்கப்பட்டது.

பொருளாதாரத்தின் முன்னுரிமைத் துறைகளுக்கான குறுங்கால, நடுத்தர காலக் கடன் வழங்கலை ஊக்குவிப்பதற்காக மத்திய வங்கி வர்த்தக வங்கிகளுக்கும் குறிப்பிட்ட சில நிதி நிறுவனங்களுக்கும் மீள் நிதியிடல் வசதிகளை வழங்கியது. அத்துடன் ஆண்டின்இறுதிக் காலாண்டில் அதிகரித்த உள்நாட்டுக் குழப்பங்களின் காரணமாக ஏற்பட்ட திரவப் பிரச்சினைகளைத் தீர்க்கும் பொருட்டு வர்த்தக வங்கிகளுக்கு 1988 இல் மீள் நிதியிடல் வசதிகளையும் வழங்கவேண்டியிருந்தது. மேலும் கடுமையான திரவப் பிரச்சினைகளுக்குட்பட்டிருந்த குறிப்பிட்ட நிதிக் கூட்டு நிலையங்களுக்கும் மீள் நிதியிடல் வழங்கப்பட்டது. பல்வேறு திட்டங்களின் கீழ் வங்கியினால் வழங்கப்பட்ட மொத்த வெளிநின்ற மீள் நிதியிடல் 1988 இல் ரூ. 3,580 இலட்சத்தினால் விரிவடைந்து ஆண்டின் இறுதியில் ரூ. 38,540 இலட்சங்களை அடைந்தது. 1988 இல் வங்கியின் பொது மூலவளங்களிலிருந்து நடுத்தர, நீண்டகாலக் கொடுகடன் நிதியத்திற்கு மத்திய வங்கி ரூ. 6,000 இலட்சங்களை மாற்றல் செய்ததன் மூலமாக நிதியிடல் இயலளவு ரூ. 18,750 இலட்சத்திற்கு உயர்வடைந்தது.

தேசிய கொடுகடன் திட்டத்தின் கீழ் மத்திய வங்கி தொடர்ந்தும் கொடுகடன் போக்கில் செல்வாக்கினைச் செலுத்தியது, இத்திட்டம் வர்த்தக வங்கிகள், தேசிய சேமிப்பு வங்கி, மற்றைய நீண்டகால கொடுகடன் நிறுவனங்கள் என்பன வற்றிற்கான கடன் வழங்கலை உள்ளடக்கியுள்ளது. எனினும் ஆங்காங்கே இடம் பெற்ற உள்நாட்டுக் குழப்பங்களினால் 1988 இற்கான திட்டத்தின் முன்னேற்றத்தினைக் கண்காணிப்பது இடர்மிக்கதாகியது. எனினும், பொருளாதாரத்தின் வேறுபட்ட துறைகளுக்குக் கொடுகடனை வழிப்படுத்துவதில் இத்திட்டம் வர்த்தக வங்கிகளுக்கும் ஏனைய கடன் வழங்கும் நிறுவனங்களுக்கும் மதிப்புமிக்க நெறிமுறைகளை வழங்கியது.

1988 இல் மூலதனச் சந்தை தேர்தல் ஆண்டிற்கே உரிய நிச்சயமற்ற சூழ்நிலையினாலும் உள்நாட்டுக் குழப்பங்களினாலும் தளர்வுற்றது. மூலதனச் சந்தையின் நடவடிக்கைகளின் மட்டம் முதலீட்டாளர்களின் ''பொறுத்திருந்து பார்க்கும்'' கொள்கைகளினால் பாதிக்கப்பட்டுள்ளதுபோல் தோன்றுகின்றது. இவ்வாண்டின் புதிய வழங்கல்களினது எண்ணிக்கை முன்னைய ஆண்டின் எண்ணிக்கையை விட இரு மடங்காக இருந்தபோதும் வழங்கப்பட்ட பங்குகளின் பெறுமதி, முன்னைய ஆண்டின் வழங்கப்பட்ட பங்குகளின் பெறுமதியான ரூ. 2,060 இலட்சத்துடன் ஒப்பிடுகையில் ரூ. 2,020 இலட்சமாக மட்டும் காணப்பட்டது. 10 புதிய வழங்கல்களில் 5 காணி சொத்து அபிவிருத்திக்காகவும் (ரூ. 1,050 இலட்சம்) 4 வங்கிகள் மற்றும் நிதிக்கானதாகவும் (ரூ. 940 இலட்சம்) ஒன்று மாத்திரம் தயாரிப்பு வகையிலும் (ரூ. 30 இலட்சம்) காணப்பட்டன. இரண்டாந்தர பங்குச் சந்தையில் மொத்த வர்த்தகம் 1987 இன் ரூ. 3,360 இலட்சத்திலிருந்து 1988 இல் ரூ. 3,800 இலட்சத்திற்கு சிறிதளவால் உயர்வடைந்தது. கொழும்பு ஆவண மாற்று நிலையத்தின் அனைத்துப் பங்கு விலைச் சுட்டெண்ணினால் அளவிடப்பட்டவாறு சந்தையில் பொதுவான விலை மட்டம் 1987 இற்கும், 1988 இற்கும் இடையில் 21 சதவீதம் கொண்ட வீழ்ச்சியைப் பதிவு செய்தது.

இதே போக்கினைத் தொடர்ந்து கொழும்பு ஆவண மாற்று நிலையத்தின் அடிக்கடி மாறுபடும் விலைச் சுட்டெண்ணும் 19 சதவீதம் கொண்டதொரு வீழ்ச்சியைப் பதிவு செய்தது.

உலகின் பொருளாதாரத்தில் பாதகமான நிலைமைகள் காணப்பட்டபோதும் 1977 இன் பொருளாதார சீரமைப்பினைத் தொடர்ந்து புத்தெழுச்சி பெற்ற இலங்கையின் பொருளாதாரம் 1983 இல் தோன்றிய உள்நாட்டுக் குழப்பங்களினைத் தொடர்ந்து பின்னடைந்தது. 1987 இல் 1.5 சதவீதத்திற்குப் பொருளாதார வளர்ச்சி குறைவடைந்தமைக்கும் கடுமையான நீண்ட வரட்சியே காரணமாக இருந்தது. 1988 இல் வானிலை நிலைமைகள் திருந்திவிட்டதெனினும் பரவலான உள்நாட்டுக் குழப்பங்கள் பொருளாதார நடவடிக்கைகளைத் தொடர்ந்தும் தடை செய்தன. அத்தகைய பின்னடைவுகள் இருந்தபோதும் 1988 இல் மீட்சியடைவதற்கான அறிகுறிகளைப் பொருளாதாரம் காட்டியதுடன், அதன் அடிப்படைப் பலத்தினையும் மாற்றமடைகின்ற சூழ்நிலைமைகளுக்கேற்ப அது தானாகவே மாறிக்கொள்ளும் இயல்பையும் எடுத்துக் காட்டியது. எனினும் சேமிப்பு பற்றாக் குறை, அதிகரித்த வரவு செலவுத் திட்டக் குறைகள் என்பனவற்றுடன் இணைந்துள்ள முக்கியமான இயக்க சமநிலையற்ற தன்மையை தொடர்ந்துமேற்படுவதனை இத்தகைய சிறிய முன்னேற்றங்கள் மறைத்துவிடுவதற்கு அனுமதிக்கக் கூடாது.

பொருளாதாரத்தின் பல துறைகளிலும் காணப்படும் சமமற்ற வளர்ச்சியின் பின்னணியில், அமைப்பு ரீதியான சீரமைப்பிற்காக நாடு பின்பற்றும் ''நடுத்தர நீண்டகால பொருளாதார கொள்கை வடிவ அமைப்புத் திட்டம்'' 1988–1991 காலப்பகுதியில் நடைமுறைப்படுத்தப்படும். இது விரைவான உறுதியான பொருளாதார வளர்ச்சிக்கு மீண்டுமொருமுறை தூண்டுதல் வழங்கும். இவ்வடிவமைப்புத் திட்டம் இறைப் பற்றாக்குறையில் படிப்படியான மிதமான தன்மையை ஏற்படுத்தி சென்மதி நிலுவையை முன்னேற்றி பணவீக்கத்தாக்கங்களைக் கட்டுப்படுத்தும். எனினும் இந்நிகழ்ச்சித் திட்டத்தின் முதலாண்டிற்கெனக் குறிக்கப்பட்ட பெரும்பாலான குறிக்கோள்களை அடையமுடியாமல் போனமைக்குப் பெருமளவு காரணம் அமைதியான சூழலை அடைவதென்பது எதிர்பார்க்கப்பட்டதிலும் பார்க்க மிகுந்த கடினமானதாக இருந்தமையேயாகும். மறுபுறத்தில் தேர்தல் ஆண்டாக இருந்தமையினால் அரச செலவினக் கடப்பாடுகள் மிகக் கூடியளவு அதிகரிப்புக்களைப் பதிவு செய்து மூலவளங்களின் நிலைமைகளில் தவிர்க்கமுடியாத விதத்தில் மேலும் தாக்கத்தினைக் கூட்டின.

இவ்வபிவிருத்திகளினது தாக்கத்தின் கீழ், 1988 இல் இறைப் பற்றாக்குறை குறிப்பிடத்தக்களவில் விரிவடைந்ததுடன் சென்மதி நிலுவையும் வெளிநாட்டு ஒதுக்கு நிலைமைகளும் மோசமடைந்தன. பண நிரம்பலின் வளர்ச்சி வீதம் விரைவுற்றமையுடன் பண வீக்கம் இரட்டை எண்களின் மட்டத்தில் ஏறத்தாழ 15 சதவீதமாக எளிதில் கட்டுப்படுத்த முடியாத விதத்தில் காணப்பட்டது. தொழில் நிலை படிப்படியாக மோசமடைந்ததுடன் வறிய மக்களின் வருமானமும் ஊட்டச்சத்து மட்டங்களும் மோசமடைவதற்குமான சான்றுகள் அதிகரித்துக் காணப்பட்டன. இது முனைப்பான தேசிய கலந்துரையாடல்களை விளைவித்து அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டங்கள் வருமானப் பகிர்ந்தளிப்பு, வறுமை ஒழிப்பு என்பனவற்றிற்குக் குறிப்பிடத்தக்களவிற்குக் கவனத்தைச் செலுத்த வேண்டும் என்பது பற்றி நாட்டில் உடன்பாடான கருத்து வளர்வதற்கு வழியமைத்தது.

அதேவேளை, பற்றுக்குறையான உள்நாட்டுச் சேமிப்புக்கள், மற்றும் முதலீடு கள் பாதிப்பிற்குள்ளாகும் வெளிநாட்டுத்துறை என்பனவற்றின் காரணமாக ஏற்பட்ட பொருளாதார வளர்ச்சி மீதான தடைகளை உள்ளடக்கிய முக்கிய அமை ப்பு ரீதியான, நிதியியல் பிரச்சினைகளை நாடு தொடர்ந்தும் எதிர்நோக்க வேண்டி யிருந்தது. உண்மையில் உள்நாட்டுச் சேமிப்புக்களின் வீதம் கடந்த நான்கு ஆண்டுகளாக மொத்த உள்நாட்டு உற்பத்தியில் ஏறத்தாழ 12.4 சதவீதத்தில் நிலையாக இருந்தமைக்கு வெளிநாட்டுத்துறையின் குறைந்த செயலாற்றம் காரண மாக இருந்த வேளையில் முதலீட்டின் ஆண்டுச் சராசரி வீதம் இதே காலப்பகுதியில் 23.4 சதவீதத்தில் நிலைத்திருந்தது. அதேவேளை ஏற்கனவே குறிப்பிட்டதைப் போன்ற வலுவான பொருளாதார விரிவாக்கத்திற்கான முன் தேவைப்பாடான உறுதியான பொருளாதார நிலைமைகளை அடைவதற்கு இலங்கையினால் முடிய வில்லை. இப்போக்குகள் தொடர அனுமதிக்கப்படுமாயின் அவை நம்பிக்கையைச் சிதைத்துப் பொருளாதார வளர்ச்சியினை இடருக்குள்ளாக்கக் கூடும். இக்காரணங் களுக்காகக் கடுமையான வறுமையை ஒழிப்பதனை வலியுறுத்துகின்ற அதேவேளை யில் திறந்த, போட்டி பொருளாதார வடிவமைப்பிற்குள்ளே பொருளாதாரத்தின் உத்வேகத்தை உறுதிப்படுத்துவதற்காக நாட்டின் இறை நிலைமையை வலுப் படுத்துவது மிக முக்கியமானதாகும்.

வலுவான பொருளாதார விரிவாக்கத்திற்கு இன்றியமையாததொரு நிலை யான பேரண்டப் பொருளாதாரத்தின் உறுதியினைப் பேணுவதற்கு இறைக் கட்டுப்பாட்டினை ஒரு முற்தேவைப்பாடாகக் கொள்ளவேண்டியதன் தேவையினை 1986 ஆம், 1987 ஆம் ஆண்டறிக்கைகள் வலியுறுத்தின. மொத்த தேசிய உற்பத்தியின் விகிதமாக மொத்த வரவுசெலவுத் திட்டப் பற்றுக்குறை 1987 இன் 11.1 சதவீதத்திலிருந்து 14.8 சதவீதத்திற்கு உயர்வடைந்ததும் விரிவாக் கப் பற்றுக்குறை (வங்கித்தொழில் முறையிலிருந்தான கடன்பாடுகள்) 1987 இன் 1.8 சதவீதத்திலிருந்து 4.1 சதவீதத்திற்கு உயர்வடைந்ததுமான 1988 இல் இறை அபிவிருத்திகள் இவ்விலக்கில் மேலும் ஒரு பின்னடைவினைப் பிரதி பலித்தன. இதன் விளைவாகச் சென்மதி நிலுவை நிலைமைகள் மோசமடைந் ததுடன் பணவீக்கத் தாக்கங்கள் மேலும் தீவிரமடைந்தன. வளர்ச்சியடைகின்ற இறைப் பற்றுக்குறை பொருளாதார முகாமைத்துவத்திற்கு பெரும் அறைகூவலை ஏற்படுத்தியுள்ளது. நாணயக் கொள்கை குறிப்பிடத்தக்களவில் இறுக்கமாக்கப் பட்டபோதும், இது பொருளாதாரத்தின் மிகையான திரவத்தன்மையை ஈர்த்துக்கொள்வதில் வரையறுக்கப்பட்ட வெற்றியையேகொண்டிருந்து, இறை மிகைகளை ஒருங்குசேர்ப்பதில் அதன் வரையறுக்கப்பட்ட பயன்பாட்டினை எடுத்துக் காட்டியது. எனவே அரசு அரசிறைக்கும் செலவினத்திற்குமிடையில் சிறந்த சமநிலையை மீண்டுமடைவது எதிர்கால வளர்ச்சிக்கும் உறுதித் தன்மைக்குமான எதிர்கால வாய்ப்புக்களை உயர்த்துவதற்கான இன்றியமையாத முன் தேவைப் பாடான இறைநிலைமையில் விரும்பிய முன்னேற்றத்தினை ஏற்படுத்து வதற்கு அத்தியாவசியமானதாகும்.

பெருமளவு இறைப் பற்றுக்குறைகளுக்கு நாடு பழக்கப்பட்டுவிடின் அத்தகைய பற்றுக்குறைகளைக் கட்டுப்படுத்துவது இடர்மிக்கதாக மாறிவிடுவதுடன் நாட்டின் நீண்டகால அபிவிருத்திக்கு இது தீங்கை விளைவிக்கும் தொடர்ச்சியான உறுதியற்ற தன்மைக்கு இட்டுச் செல்லும். அத்தகைய பற்றுக்குறைகள் பெருமளவிற்கு விரிவாக்க மூலங்களிலிருந்து நிதியிடப்பட வேண்டியிருக்குமிடத்து சமூகத்தின் மிக வறிய உறுப்பினர்களே பெருமளவு சுமையைத் தாங்கவேண்டி ஏற்படும். வளர்ந்துவரும் இறைப் பற்றுக்குறைக்கான தீர்வு வழமையாக உயர்கின்ற அரசிறை, மற்றும் செலவினத்தில் வெட்டு ஆகியவற்றுடன் தொடர்புற்றிருக்கின்ற வேளையில் சமூக, பொருளாதாரச் செலவுகள் இரண்டினையும் ஆகக் குறைப்பதற்கும் முயற்சிக்கிறது. 1988 இறை அபிவிருத்தி இறைச் செயலாற்றத்தினை முன்னேற்றுவதற்கு இரு முனைகளிலான ஒருங்கிணைந்த நடவடிக்கைகள் தேவைப்படுகின்றன என்பதனைச் சுட்டிக் காட்டுகின்றது. முதலாவது தேவை அண்மை ஆண்டுகளில் குறைவடைந்த போக்குகளைக் கொண்டிருந்த அரசிறையை உயர்த்துவதற்கான வலுவான முயற்சியாகும். 1985 இல் 22.3 சதவீதமாக இருந்த மொத்த உள்நாட்டு உற்பத்திக்கான அரசின் அரசிறை விகிதம் 1988 இல் 18.9 சதவீதத்திற்கு வீழ்ச்சியடைந்தது. இதையொத்த அபிவிருத்தியாக மொத்த உள்நாட்டு உற்பத்திக்கான வரி அரசிறை விகிதம் 1984 இன் 19.5 சதவீதத்திலிருந்து 1988 இல் 16.0 சதவீதத்திற்கு வீழ்ச்சியடைந்தது. இவ் விகிதங்களில் ஏற்பட்ட வீழ்ச்சிகள் அரசின் அரசிறைச் சேகரிப்புக்களின் முயற்சியில் ஏற்பட்ட குறிப்பிடத்தக்க தேய்வினைக் காட்டியது. இறைச் செயலாற்றத்தினை முன்னேற்ற வேண்டின் இதனைக் கட்டுப்படுத்துவது அவசியமாகும். இரண்டாவது நுகர்வு சார்பான செலவினத்தின் உள்ளமைப்பில் குறிப்பிடத்தக்க மாற்றங்கள் காணப்பட்டன. எடுத்துக்காட்டாக, அண்மைய ஆண்டுகளில் அரசு செலவினத்தில் வட்டிக் கொடுப்பனவுகள் விரைவாக வளர்ச்சியடையும் கூறாக அமைந்திருக்கின்ற வேளையில் மூலதனச் செலவினம் வெட்டுக்களுக்குட்படும் ஒரு வகையாகத் தோற்றமளித்தது. இதன் விளைவாக மொத்த உள்நாட்டு உற்பத்தியின் விகிதமாக மொத்த அரச செலவினம் அதிகரித்த வேளையில், மொத்த உள்நாட்டு உற்பத்தியின் விகிதமாக மூலதனச் செலவினம் 1985 இன் 13.3 சதவீதத்திலிருந்து 1988 இல் 9.5 சதவீதத்திற்குக் குறைவடைந்தது. இத்தன்மை, எதிர்கால அபிவிருத்தியின் வேகத்தினைப் பேணுவதற்கு உதவுவதாக இருக்கவில்லை. எனவே சிறந்த வரி முயற்சிகள் மூலமாகக் கூடியளவு அரசிறையை உயர்த்துவதும், இவ்வரசிறையில் பெரும்பங்கினை எதிர்கால வளர்ச்சிக்கும் தொழில் உருவாக்கத்திற்குமான அடிப்படையாக அமையும் முதலீட்டிற்குத் திருப்புவதும் உடனடித் தேவையாகும்.

பெருமளவு இறைப் பற்றுக்குறைகள் சென்மதி நிலுவையில் பெருமளவு நடைமுறைக் கணக்குப் பற்றுக்குறையை ஏற்படுத்தி அதன் விளைவாக வெளிநாட்டு ஒதுக்குகளிலும் செலாவணி வீதத்திலும் சிக்கல்களை ஏற்படுத்துவதன் காரணமாகச் சென்மதி நிலுவையில் முன்னேற்றத்தினை ஏற்படுத்துவதற்கு வரவு செலவுத்திட்டக் குறைகளின் தற்போதைய மட்டத்தினைச் சுருக்க வேண்டியது அவசியமாகும். சென்மதி நிலுவையின் நடைமுறைக் கணக்கின் முன்னேற்றம் மொத்தச் சேமிப்புக்களுக்கும் முதலீடுகளுக்குமிடையிலான வேறுபாட்டில் ஒரே அளவான குறைப்பினை வேண்டி நிற்கின்றது. பின்னையதின் விரிவாக்கத்திற்கு வரவு செலவுத் திட்ட சேமிப்புக்கள் மோசமடைந்தமையே பெருமளவு காரணமாகையால் இறைச் சமமின்மையில் ஏற்படும் குறைப்பு சென்மதி நிலுவையின் வலுவான முன்னேற்றத்திற்குக் குறிப்பிடத்தக்களவில் உதவும்.

ஊட்டச் சத்துக் குறைபாடுகள் பரவி வருவதற்கான சில சான்றுகள் காணப்படுவதன் காரணமாக அண்மைய எதிர்காலத்தில் அரச செலவின நிகழ்ச்சித் திட்டங்களில் வறுமை ஒழிப்பு நிகழ்ச்சித் திட்டங்கள் உயர்ந்த முன்னுரிமையைப் பெற்று வருகின்றன. எனினும், நிதி மூலவளங்களின் மீது தற்போதுள்ள கட்டுப் பாடுகளின் கீழ் இந்நிகழ்ச்சித் திட்டங்கள் உண்மையில் தகுதியுடையோருக்கு மட்டும் மிகக் கவனமாக இலக்கிடப்பட வேண்டும். அதே நேரம் வறுமை ஒழிப்பிற்கான இறுதியான நீண்ட காலத் தீர்வு பொருளாதாரத்தின் அனைத்துத் துறைகளிலும் உற்பத்தித் திறனுள்ள தொழில் நிலையில் ஏற்படும் விரைவான விரிவாக்கத்துடன் இணைந்துள்ளது என்பதையும் கவனத்திற் கொள்ள வேண்டும். எனவே, இனிவரும் ஆண்டுகளில் முதலீட்டுத் திட்டங்கள் உற்பத்தித் திறன் மிக்க தொழில்நிலை உருவாக்கத்திற்குப் போதுமானளவு முக்கியத்துவம் வழங்கும் விதத்தில் பொருத்தமாக அமைய வேண்டும். இவற்றை அடையும் பொருட்டுப் பொதுவான பொருளாதாரக் கொள்கை, விரிவான பொருளாதார முகாமைக் கூடாக நம்பிக்கையைப் பெறத்தக்க விதத்தில் வடிவமைக்கப்பட வேண்டும்.